1202

உ

# மனமோகினி

ஓர் மாதாந்தச் சஞ்சிகை

(முதல்தர நாவல்கள்)

21 FEB 1924

தொகுதி 2.] 1924ஞ ஜனவரிமீ 1வ [பகுதி 12.

## ஞான செல்வாம்பாள் அல்லது இரண்டு சகோதரிகள்.

ஸ்ரீமான்
ஆரணி-குப்புசாமி முதலியார் அவர்களால்
இயற்றப்பட்டது

"ஆனந்தபோதினி" பத்திராதிபர்
நா. முனிசாமி முதலியாரால்
பிரகரிக்கப்பட்டது

1924

ரிஜிஸ்டர்ட்] [காபிரைட்.

# மனமோகினி

ஓர் மாதாந்த சஞ்சிகை.

இதில் இனிய நாவல்களே வெளிவரும். நமது "ஆனந்த போதினிச்" சந்தாதாரர்களிற் பலர் அச்சஞ்சிகையில், ஒவ்வொரு நாவலும் சிற்சில சஞ்சிகைகளில் விரைவில் முடிவு பெறும்படி, சில நாவல்களை வெளிப்படுத்தி வரவேண்டுமென்று அடிக்கடி கேட்டு வருகின்றார்கள். அச்சஞ்சிகை பற்பல விஷயங்களுக்கும் இடந் தர வேண்டியதாயிருத்தலின், அதில் ஒவ்வொரு மாதத்திற்கும் இரண்டு மூன்று பக்கங்களே நாவல் வெளியிடக்கூடியதாயிருக்கிறது. அதனால் நம் நண்பர்களின் விருப்பம் நிறைவேறக் கூடாததாகிறது. ஆதலின் நாவலுக்கென்றே ஒரு சஞ்சிகையை வெளிப்படுத்தி வந்தால், அது மேற்கூறியவர்களின் விருப்பத்தைப் பூர்த்தி செய்வதோடு மற்றைய தமிழபிமானிகட்கும் திருப்தி யளிக்கக் கூடியதாயிருக்குமென்று இதனை 1922ஹு பிப்ரவரிமீ 1உ முதல் ஆரம்பித்தோம். இதில் ஒவ்வொரு பெரிய நாவல் தொடர்ச்சியாக வந்து ஆறு மாதங்களுக்கொரு முறை ஒவ்வொரு முழுப் புத்தகம் முடிவுபெறும். ஒரு வருஷத்துக்கு ஐந்து ரூபா விலை மதிப்புள்ள இரண்டு புத்தகங்கள் பைண்டாகிவிடும். இப்போது மகா அற்புதம் பொருந்திய அநேக நாவல்களின் ஆசிரியரான ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் இயற்றப்பட்ட "அமராவதி" என்னும் நாவல் முதலில் வெளியாகி முடிந்தது. இச்சஞ்சிகை கிரௌன் 80-பக்கங் கொண்டது. வருஷ சந்தா ரூ. 2-8-0 இரண்டரைதான். வெளிநாட்டிற்கு 3—0—0. 1923ஹு மார்ச்சுமீ 1உ முதல் இதே நூலாசிரியரால் வரையப்பட்ட "பவளத்தீவு" அல்லது "குடும்ப சாபம்" என்ற மிக்க அதிசயமான நாவல் தொடங்கி, வெளியாகிவருகிறது. அடியிற்கண்ட விலாசத்திற்கு உடனே எழுதி வெளியாகியுள்ள சஞ்சிகைகளை வி-பி-யிலோ முன் பணம் அனுப்பியோ பெற்றுக் கொள்ளுங்கள்.

☞ முன் பணம் அனுப்பினால் 2—8—0யும், மணியார்டர் கமிஷன் 1-அணுவுமாகும். வி-பி-யில் ரூபா 2—13—0 ஆகும்.

இது அநேக நாவல்கள் இயற்றிய ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் அவர்களால் எழுதப்பட்டது. அவருடைய நாவலின் போக்கு எல்லோருக்குந் தெரிந்திருக்குமாகையால் மாதிரி காப்பி அனுப்பப்படமாட்டாது.

**மானேஜர்: "ஆனந்த நிலையம்"**

நெ. 6, வெங்கடேச மேஸ்திரி வீதி, மதராஸ்

தது. சுருக்கமாகக் கூறும் பக்ஷத்தில் அவளுடைய வனப்பு காண்போர் எவராயினும் அவர்கள் மனதைக் கவர்ந்து கொள்ளும் தன்மையுடையதாக விருந்தது. தங்கள் தேசா சாரப்படி ஞானம்பாள் தன் தந்தையின் விருந்தினனாக வந்த மச்சநாதனை யன்போடு உபசரித்தாள்.

மூவரும் போஜனம் செய்தபின் மச்சநாதன் தன் விஷயத்தைப் பற்றிப் பிரஸ்தாபித்தபோது, லாயர் அதைப்பற்றிக் கூறாமல், பொதுவாகத் தான் அத்தகைய சொந்தக்காரர் தெரியாத ஆஸ்திகள் பலவற்றின் சொந்தக் காரரைக் கண்டுபிடித்து அவர்களுக்கு அவற்றை வாங்கிக் கொடுத்திருப்பதாகப் பல திருட்டாந்தங்களோடு கூறி னான். பிறகு மச்சநாதன் "இந்த ஆஸ்தி யிருப்பதைப் பற்றி முதல் முதல் எப்படி கண்டுபிடித்தீர்கள்?" என்று கேட்டான். லாயர் "நான் அதற்காகவே ஒரு ஏஜென் டைப் பிரத்தியேகமாய் ஏற்பாடு செய்து வைத்திருக்கி றேன்" என்றான். கடைசியில் மச்சநாதன் லாயரை நோக்கி, "இந்த ஆஸ்தியின் தொகை எவ்வளவிருக்கும்?" என்றான்.

இலாயர்:—"நான் உன்னிடம் எவ்வளவு பணம் சம்பா தித்தாலும் அது என் கஷ்டத்திற்குத் தக்கதாகவே யிருக்கும். இதற்காக நான் பல வருடங்களாகப் பட்ட கஷ்டம் சொல்லத்தரமல்ல. எத்தனையோ பத்திரிகை யாபீஸ்களில் விளம்பரம் செய்தேன்" என்று மிக்க விரிவாகத் தன் கஷ்டங்களை யெல்லாம் கூறி அதன் பிறகு மச்சநாதன் விஷயமாகத் தான் எடுத்துக்கொண்ட முயற்சிகளைப் பற்றிக் கூறினான். கடைசியில் மச்சநாதன் "முடிவில் இது உண்மை யானதே என்று தங்களுக்குப் புலப்பட்டது" என்றான்.



சென்னை-600 008
186497.

லாயர் :—“இரு இரு. அவசரப்பட வேண்டாம்; எல்லாம் இன்னும் இரண்டொரு மாதங்களில் தெரிந்துவிடும். நான் பல வருடங்கள் பொறுத்ததுபோல் நீ சில மாதங்கள் பொறு. எனக்குள் என்னமோ இப்போது நம்பகம் உண்டாயிருக்கிறது. எதற்கும் கொஞ்சம் பொறுக்கவேண்டும்” என்றான்.

பிறகு இன்னும் சற்றுநேரம் இவர்கள் சம்பாஷித்துக்கொண்டிருந்தபின் மச்சநாதன் விடைபெற்றுச் சென்றான். அவன் போகுமுன் லாயர் நீ எவ்வளவு அடிக்கடி இங்கு வருகிறாயோ அவ்வளவும் எனக்குச் சந்தோஷமே” என்றான்.

மச்சநாதன் தன் வாசஸ்தலத்திற்குச் சென்றுகொண்டிருக்கையில் “ஆ! லாயருக்கு இதைப்பற்றி நன்றாய்த் தெரியும். அவன் வேலை செய்கிறபடி செய்யட்டும்; நாம் அதைப்பற்றி அடிக்கடி கேட்கவேகூடாது. அவன் புத்திரி மிக்க அழகு வாய்ந்தவள். மொத்தத்தில் இவர்கள் மிக்க நல்லமனிதர்களே” என்று தனக்குத்தானே பேசிக்கொண்டே சென்றான்.

அது முதல் அவன் கௌரவமானவிதமாகச் சீவனம் செய்து வந்தான். சூதாட்டத்திற்குப் போவதில்லை. அவனுக்கு என்னேரமும் வேலை சரியாக விருந்தது. பலபத்திரங்களுக்கு விளம்பரம் எழுதியனுப்புதல், அந்த விடங்களுக்குச் சென்று விசாரித்தல், அவற்றிற்கு வரும் பதில் கடிதங்களுக்குப் பதில் எழுதல், தினம் வந்த கடிதங்களையெடுத்துக்கொண்டு லாயரின் ஆபீசுக்குச் சென்று அவற்றைக் காட்டுதல் முதலிய வேலைகள் இருக்கின்றன. இவையன்றி லாயர் பலவித பத்திரங்கள் குறிப்புகள் முதலிய அனேகம் இவனிடம் கொடுத்து எழுதவைப்பான். இவன் லாயரின் யோசனைப்படி வேலை செய்யட்டும்,

அதைப்பற்றி யெல்லாம் நாம்கேட்கலாகாது என்று எண்ணிக்கொண்டு, அவன் சொல்லுகிறபடி யெல்லாம் எழுதிக்கொண்டிருந்தான். ஆனல் அவையென்ன வென்று கூட யோசனை செய்தவனுமல்ல, கவனித்தவனுமல்ல.

லாயரின் ஆபீசைவிட்டுப் புறப்பட்டதும் லாயரின் வீட்டிற்குச் சென்று அவன் புத்திரியாகிய ஞானம்பாளோடு சம்பாஷித்துக் கொண்டிருந்து விட்டுப் பிறகு தன் வாசஸ்தலத்திற்குச் செல்வான். மாலைப்போதில் அடிக்கடி யவர்கள் வீட்டிற்கே போசனத்திற்குச் செல்வான்.

லாயரின் மூத்த குமாரத்தியின் பெயர் உலகநாயகி. அவள் இலிங்கராசுப்பிள்ளையென்ற ஒருவர்த்தகனை மணம் புரிந்து கொண்டு அந்த நகரத்திலேயே வசித்துக்கொண்டிருக்கிருள். அந்த வர்த்தகன் மிக்க நாணயமுடையவன். அவர்கள் இருவரும் நல்ல மனிதர்கள். மச்சநாதன் அவர்கள் வீட்டிற்குச் செல்லும்போதெல்லாம் அவர்கள் அவனைப் பட்சத்தோடு நல்வரவேற்று உபசரிப்பார்கள்.

மச்சநாதன் வரவர லாயரின் வீட்டிற்குச் சென்று ஞானம்பாளிடம் சம்பாஷிப்பதில் அதிக காலத்தைச் செலவழிக்கத் தொடங்கினன். ஞானம்பாளும் அவனிடம் வரவர அன்புகாட்டிப் பேசத் தொடங்கினள்.

இலிங்கராசுப்பிள்ளை நல்ல க்ஷேமமான நிலைமையிலிருப்பவன். அவன் அப்போதைக் கப்போது தன் நண்பர்களுக்கு கேளிக்கை விருந்து தோட்டவிருந்து முதலியவை வைப்பதுண்டு. அக்காலத்தில் லாயர் வேலாயுதம் பிள்ளை, அவன் இளையகுமாரத்தி, மச்சநாதன் இவர்கள் முதலாவதாக அழைக்கப் படுவார்கள். அக்காலங்களில் அங்கு விருந்திற்குவரும் நாணயமான வாலிபர்களில் பலர் ஞானம்பாளை மணம்புரிய விரும்பி அவள் அன்பைப்

பெற முயற்சி செய்வதையும், ஆனல் ஞானம்பாள் அவர்களில் எவரிடமும் அன்பு காட்டாது மற்றவர்களைக் காட்டிலும் தன்னிடத்திலேயே அன்பு காட்டி நடந்து கொள்வதையும் மச்சநாதன் பார்க்கப் பார்க்க அவனுக்குள் ஆழ்ந்த சிந்தனையுதித்தது!

அவன் சாதாரணமாகவே ஞானம்பாளை மிக்க வனப்புடையவள் என்று ஆரம்பத்தி லிருந்தே கருதியிருக்கிறன். வரவர அவள்மேல் அவனுக்கு அன்புண்டாயிற்று. "அவள் தந்தை செல்வவந்தன். அவன் இறந்தபின் அவன் ஆஸ்தி முழுமையும் தன் இரண்டு புத்திரிகளுக்கே வைப்பான். இப்போது நமக்கு அவன் வாங்கிக் கொடுக்கும் ஆஸ்தியில் நூற்றுக்கு இருபது விகிதம் அவனுக்கு அளிக்கிறேம். நாம் ஞானம்பாளை மணம் புரிந்தால் அந்தத் தொகை பிறகு நமக்கே கிடைக்கும்; அந்த ஆஸ்தி விஷயம் நமக்கு அனுகூலப்படாமல் போய்விட்டாலும் இவன் தன் மகளுக்களிக்கும் சொத்தினுல் நாம் போதுமான செல்வமடைவோம்'' என்றிவ்வாறு சிந்தித்துக் கொண்டான்.

ஞானம்பாள் சாதாரணமாக எல்லா விஷயங்களிலும் திருப்திகரமான குணமும் நடக்கையு முடையவளேனும் அவளிடம் சில குற்றங்களிருந்தன. ஆரம்பமுதல் தான் வளர்க்கப்பட்டமாதிரியில் அவள்செல்வத்தில் பிரியமுடையவளாகவும், சற்று டம்பாகாரமாய் உடுப்பதிலும் ஆபரணங்க ளணிவதிலும் பணச்செலவு செய்வதிலும், ஆ! அவளுக்கென்ன அவள்செல்வவதி யென்று பிறர் தன்னைப் புகழ்ந்து மதிக்கவேண்டு மென்பதிலும் விருப்ப முடையவள். மச்சநாதன் மேற்கண்டவாறு சிந்திக்கையில் அவள் நடக்கைகளைப்பற்றி "உலகில் ஒரு குறைவு மில்லாதவர்கள் ஒருவருமேயில்லை. அற்பகுறைகள் எல்லாரிடத்திலு

முண்டு" என்று தனக்குத்தானே சமாதானம் கூறிக் கொண்டான்.

இவ்வாற்றல் மச்சநாதன் ஞானம்பாளை மணம் புரிந்துகொள்ள வேண்டுமென்று தனக்குள் தீர்மானித்துக் கொண்டான் என்று நாம்கூறவேண்டுவதில்லை. இதற்கிடையில் லாயர் மறுபடி அவனுக்கு ஒரு ஐந்நூறு பவுன் செக் எழுதிக் கொடுத்தான். சந்தர்ப்பத்தை நோக்க ஞானம்பாள் தன்னை மணம்புரிந்து கொள்ளச் சம்மதிப்பாளென்றும் அவள் தந்தையும் அதற்குச் சம்மதிப்பாரென்றும் அவனுக்குப் புலப்பட்டது. கடைசியில் ஒரு நாள் மச்சநாதன் ஞானம்பாளிடம் தன் காதலைவெளியிட்டான். இருவரும் கலந்து பேசியபின் தந்தையின் சம்மதத்தைக்கேட்டு அவர் ஒப்புக்கொண்டால் மணம்புரிந்து கொள்வதென்று தீர்மானித்துக் கொண்டார்கள்.

வேலாயுதம்பிள்ளை சந்தோஷத்தோடு அதற்கு ஒப்புக்கொண்டான். ஞானம்பாளின் தமக்கையும் அவள் கணவனும் சந்தோஷமாய் அதற்குச் சம்மதித்தார்கள். அன்று முதல் அவர்கள் மச்சநாதனைத் தங்கள் சுற்றத்தானைச் சந்தோஷத்தோடும் அன்போடும் உபசரிக்கத் தொடங்கினார்கள்.

லாயர் மச்சநாதனிடம் இரண்டாயிரம் பவுனுக்கு ஒரு செக்கெழுதிக் கொடுத்து, செல்வப் பிரபுக்கள் வசிக்கும் பாகத்தில் நாணயமான வீட்டை வாடகைக்கு எடுத்துக்கொண்டு அதை நன்றாய் அலங்கரித்து வைத்துக் கொள்ளும்படி கூறினான். அதோடு அத்தொகைக்கு மச்சநாதனிடம் ஒரு பத்திரம் எழுதிவாங்கிக்கொண்டு "உமது விவகாரம் முழுமையும் அநுகூலமான முடிவிற்கு வரும்போது இச்சில்லரைத் தொகைகளைப் பற்றிப் பைசல் செய்து கொள்ளலாம்" என்றான்.

மச்சநாதன் லாயரை மயானபூமியிற் கண்டு ஆறுமாதங்கள்கழிந்தன. ஏழாவதுமாதம் அவனுக்கும் ஞானம்பாளுக்கும் கலியாணம் நடந்தது. உடனே புருடனும் மனைவியும் ஏற்பாடு செய்யப்பட்டபடி புதுவீட்டில்போய் வசிக்கத் தொடங்கினர்கள். மச்சநாதன் தன்னுடைய விவகாரங்களைப்பற்றித் தன்மாமனர் பேச்சையே நம்பிக் கொண்டிருந்தான். லாயர் அப்போதைக் கப்போது அந்த விவகாரம் அனுகூலமாகவே நிறைவேறிக் கொண்டிருக்கிறதென்று கூறிக்கொண் டிருந்தான். இடையிடையில் மச்சநாதன் கைப்பட்ட பல கணக்குகளும் குறிப்புகளும் பத்திரங்களும் எழுதப்பட்டன. குடும்ப விவகாரத்தில் மச்சநாதனுக்கு கொஞ்சம் அதிருப்தி யிருந்தது. அதாவது தன்மனைவி செல்வப்பெருமையில் பிரியங் கொண்டிருப்பவ ளென்றும், சற்று பிடிவாத குணமுடையவளென்றும், முரட்டுத்தன முடையவளென்றும் அவன் மனதிற்பட்டது. ஆனல் அவளுக்குத் தன்னிடம் பூரணமான அன்பும் மரியாதையு மிருக்கிறதென்று அவனுக்குப்பூரண நம்பிக்கை யிருந்தது.

மணம்புரிந்த மறுவருடம் மச்சநாதன் மனைவி ஒரு பெண் மகவைப் பெற்றாள். அப்பெண்ணுக்கு அழகாம்பாள் என்று பெயர் வைக்கப்பட்டது. அழகாம்பாள் பிறக்க இரண்டு வாரங்கள் இருக்கும்போது ஞானம்பாளின் தமக்கையாகிய உலகநாயகியும் ஒரு பெண் மகவை யீன்றாள். அக்குழவிக்குச் செல்வநாயகி என்ற பெயரிடப் பட்டது. நேயர்களே! இந்த இரண்டு பெண்களுமே நமது கதாநாயகிகள்.

இரண்டு குடும்பங்களிலும் சந்தோஷக் கொண்டாட்டங்கள் நடந்தன. நமது மச்சநாதன் இப்போது பூரணசந்தோஷத்திலிருக்கிறன் என்பதிற் றடையே யில்லை. அவன்

சந்தோஷத்தைப் பூரணமாக்க இன்னெரு சம்பவம் நேர்ந்தது. அதாவது லாயர் ஒருநாள் மச்சநாதனை நோக்கி உன் விஷயங்கள் அனுகூலமான முடிவிற்கு வரும் சமயம் நெருங்கிவிட்டது என்று கூறினன்.

கடைசியில் அவன் விஷயத்தைப்பற்றி முடிவான சங்கதியைக் கூறும் நாள் வந்துவிட்டது. அப்போது அழகாம்பாளுக்கு வயது ஒரு மாதமாயிற்று. ஞானம்பாளுக்கும் தேகம் பூரண சுகமடைந்து விட்டது. கடைசியில் ஒருநாள் மச்சநாதனும் அவன் மனைவியும் போஜனம் செய்துகொண் டிருக்கும்போது மச்சநாதன் விஷயம் அன்று முடிவாய்த் தெரியுமாதலால் இருவரும் மிக்க சந்தோஷமாக விருந்தார்கள். மச்சநாதன் சங்கதியை யறிந்து கொள்ள லாயரின் ஆபீசுக்குச் செல்லத் துரிதமாகப் போசனம் செய்தான். ஞானம்பாளுக்குத் தன் தந்தையின் விஷயங்க ளெல்லாம் சற்றேறக்குறையத் தெரியுமெனினும், தன் கணவனுடைய விவகாரத்தைப் பற்றி மட்டும் விவரம் ஒன்றும் தெரியாதென்று கூறினள்.

போஜனம் முடிந்ததும் மச்சநாதன் லாயரின் ஆபீசுக்குச் சென்றான். அச்சமயம் அவன் மனத் துடிப்பு இத்தகைய தென்று கூற முடியாது. ஆபீசுக்குள் நுழைந்ததும் பிரதம இலிகிதராகிய தம்புசாமிப் பிள்ளையைக் கண்டு லாயர்வந்து விட்டாரா என்று கேட்டான். தம்புசாமி அன்று மச்சநாதனுக்குப் புன்னகையோடு மிக்க மரியாதையாக வந்தனமளித்து "ஆகா வந்திருக்கிறர். தங்களையே யெதிர்பார்த்துக் கொண்டிருக்கிறர்" என்றான்.

மச்சநாதன் லாயர் இருக்கும் அறைக்குள் சென்றதும் வேலாயுதம்பிள்ளை அவன் கரத்தைப்பற்றிக்கொண்டு அன்போடு ஆசனத்திலமர்த்தி, "உனது விஷயம் பெரும்பாலும் அனுகூலமாகவே முடியுமென்றுமட்டும் நான்

அறிவேனாயினும், இவ்வளவு விசேஷமாக இருக்குமென்று நான் கருதியிருக்கவில்லை. இப்போது நீ நிதானமாக நான் கூறும் விவகாரத்தைச் செவி யேற்கவேண்டும்.

நான் இதுகாறும் இவ்விஷயங்களை உனக்கேனும் உன் மனைவிக்கேனும் கூறாமல் இரகசியமாக வைத்துக் கொண்டிருந்தது உங்கள் நன்மையைக் கருதியே. ஏனெனில் இது அனுகூலமாக முடிந்தால் தான் உங்களுக்குச் சந்தோஷமாக விருக்கும்; அப்படிக்கின்றி ஒரு சமயம் பிரதிகூலமாக முடிந்ததோ உங்களுக்கு மிக்க விசனமாக விருக்கும். அதனால் பூரணமாக உண்மையை யறியாமுன், உங்களுக்கு ஆசையைப் புகட்டிவிடக் கூடாதென்று நான் அதைப்பற்றிக் கூறவில்லை.

மச்சநாதன்:—"தாங்கள் எப்போதுமே என் நன்மையைக் கருதியே யாவும் செய்து வருகிறீரென்று நான் முதலிருந்தே யறிவேன். அந்த நன்றியை யெவ்வாறு காட்டுவ தென்பதே யெனக்குப் புலப்படவில்லை..." என்றதே,

வேலாயுதம்பிள்ளை:—இருக்கட்டும். இருக்கட்டும். நீ முன்பு கூறியதுபோல் நான் இவ்விஷயத்தில் மிக்க கஷ்டமெடுத்துக்கொண்டேன். அதிக பணச் செலவும் செய்தேன். பொறுமையாகப் பல வருடங்களுழைத்தேன். பின்னால் நீயுன் உழைப்பினால் உன்னை யறியாமலே அவ்விஷயத்தில் எனக்கு மிக்க உதவி செய்தாய். கடைசியில் நமது உழைப்பிற்குக் கடவுள் நல்ல பலனளித்தார்.

அந்த ஆஸ்தி இயற்கையிலேயே திரண்ட ஆஸ்தி. இப்போது இவ்வளவு காலமாக அதற்கு வட்டியும் வட்டிக்கு வட்டியும் சேர்ந்து பெரிய ஆஸ்தியாய்விட்டது. நீ திடுக்கிடவேண்டாம். இப்போது அந்த ரொக்கத் தொகை

மட்டும் மொத்தம் இரண்டு இலட்சம் பவுன் இருக்கிறது” என்றான்.

மச்சநாதன்:—“ஆ! அப்படியா? இது நம்பத்தகுந்ததா?” என்றான்.

லாயர்:—“இதுமட்டுமல்ல. நீ ஆத்திரப்படவேண்டாம். இத்தொகை நெடுநாள் வட்டி, வட்டிக்கு வட்டியாவும் சேர்ந்து இவ்வளவாயிற்று. இத்தொகை ஒரு பாங்கியி லிருக்கிறது. அதைச் சுலபமாக வாங்கிக் கொள்ளலாம். இதுமட்டுமல்ல. இதைச் சேர்ந்த பூஸ்திதி சென்னூர் ஜில்லாவிலிருக்கிறது. இதோடு இதைச் சேர்ந்த பிரபுப்பட்ட மிருக்கிறது. உன் மூதாதை யொருவர் அரசருக்கு ஒரு பிரதானமான உதவிசெய்து அதற்காகப் பிரபுப் பட்டமும் பூஸ்திதி யும் பெற்றார். அதுவும் இராஜாங்கத்தார் வசத்தி லிருக்கிறது. அந்த ரொக்கத்தைப் போலவே இதை யும் சுலபமாகப் பெற்றுக்கொள்ளலாம். ஆனால் இவ்விஷயத்தில் சில சடங்குகளிருக்கின்றன. அரச னுடைய மந்திராலோசனைச் சபை கூடும்போது அதற்கு ஆவசியமான பத்திரங்களைத் தாக்கல்செய்து சன்னது பெற்றுக்கொள்ளவேண்டும். நீ இப்போது மச்சநாதம் பிரபுதான். ஆயினும் மந்திராலோசனைச் சபையாரின் சந்நதைப் பெற்றபிறகே இப்பட்டத் தைப் பகிரங்கமாக ஏற்றுக்கொள்ளவேண்டும்” என்றான்.

இவை யாவும் கேட்ட மச்சநாதன் மிக்க வியப் படைந்து அடக்க முடியாத ஆனந்தங்கொண்டு லாயரின் கரத்தைப் பற்றிக்கொண்டு பன்முறை தன் நன்றியை வெளியிட்டு வந்தனமளித்தான். லாயர் “இனித் தாங்கள் மனைக்குச் சென்று தங்கள் மனைவிக்கு இச்சந்தோட

சமாசாரத்தை அறிவிக்கலாகும்'' என்று சந்தோடத்தோடு கூறினன்.

மச்சநாதன் வேலாயுதம்பிள்ளையின் அறையிலிருந்து வெளிவந்து இலிகிதர்களிருக்கும் அறையைக் கடக்கும்போது, பிரதம இலிகிதனுகிய தம்புசாமி அவனைக் கண்டதும் எழுந்து மிக்க வணக்கத்தோடுவந்தன மளித்து, 'தங்கள் நல்லதிர்ஷ்டத்திற்காக மிக்க சந்தோஷம் கொண்டாடுகிறேன். நியாயமாக நான் தங்களைப் பிரபுவே யென்று உபசரிக்கவேண்டும்' என்றான்.

மச்சநாதன்:—"இல்லை யில்லை. அதற்கு இன்னும் கொஞ்ச நாட்கள் செல்லவேண்டும். ஆயினும் உனது அன்பிற்காக மிக்க வந்தனம்'' என்றான்.

தம்புசாமிப் பிள்ளைக்கு மட்டுமே மச்சநாதனைப் பற்றிய இந்த இரகசிய மனைத்தும் தெரியும். மற்ற இரண்டு இலிகிதர்களுக்கும் அதைப்பற்றி யொன்றுமே தெரியாது. ஆயினும் பிரதமலிகிதர் மச்சநாதனுக்குச் செய்த மரியாதையைக் கண்டதும் அவர்களும் அவனுக்கு மிக்க மரியாதை செய்தார்கள். மச்சநாதன், உடனே ஒரு ஐந்து பவுன் நோட்டையெடுத்து அவர்களிடமளித்து "இதைக்கொண்டு சந்தோடங் கொண்டாடுங்கள்'' என்றான்.

இலிகிதர்கள் மிக்க சந்தோஷத்தோடு அதைப் பெற்றுக்கொண்டார்கள். மச்சநாதனுக்கு யாவும் கனவுபோலிருந்தது. திடீலென்று மிக்க உன்னதமான பதவியையும் திரண்ட செல்வத்தையும் பெற்றதாக வறிந்த எவனுக்குத்தான் அத்தகைய உணர்ச்சி யுண்டாகாது.

## 4-வது அத்தியாயம்.

### யோக்யதை வெளிப்பட்டது—எல்லாம் பகற்கனவே.

மச்சநாதன் இலாயர் ஆபீசைவிட்டதும் துரிதமாகத் தன் மனைக்குச் சென்றான். அச்சமயம் அங்கு ஞானம்பாளின் தமக்கையும் அவள் கணவனும் வந்திருந்தார்கள். மச்சநாதன் சங்கதியைக் கூறினான். அதைக் கேட்ட அவன் மனைவி திடமனதுடையவளானதால் தனக்குள் உண்டான சந்தோஷத்தை வெளிக்குக் காட்டாமல் பொறுமையோடிருந்தாள். ஆனால் தன் கணவனுக்குப் பிரபுப்பட்டமும் திரண்ட செல்வமும் கிடைத்ததைப்பற்றி அவளுக்குள் மிக்க சந்தோடமும் பெருமையும் உண்டாயின.

மச்சநாதன் சந்தோஷத்தால் பித்தங்கொண்டவன் போலாகிவிட்டான். தன் மனைவியைப் பன்முறை யாலிங்கனம் செய்துகொண்டான். குழந்தையை அளவுமீறிக் கொஞ்சினான். அவன் மனைவிக்கு அத்தகைய நடக்கை பிடிக்கவில்லை. அவன் அங்கிருந்து தான் முன்பு போஜனம் செய்துகொண்டிருந்த ஹோட்டலுக்குச் சென்றான். அந்த விடத்திற்கு ஒருவருடமாய் அவன் செல்வதில்லை. ஹோட்டல்காரனுக்கும் அங்குள்ள வேலைக்காரருக்கும், அச்சமயம் அங்கு வந்திருந்த தனக்கு அறிமுகமான இரண்டொருவர்க்கும் தனக்குக் கிடைத்த அதிர்ஷ்டத்தைப் பற்றிக் கூறினான்.

அதன் பிறகு கடைவீதிக்குச் சென்று தான் அடைந்த அந்தஸ்து யாவருக்கும் தெரியும் பொருட்டு ஒரு நாணயமான வியாபாரியிடம் தனக்கு அவசியமில்லாத நகைகள், உடைகள் முதலியவற்றை யெல்லாம் வாங்கினான். தான் வழியில் கண்டவர்களில் மிகச் சொல்ப

அறிமுகமுடையவர்களிடம் கூட மிக்க அன்போடு பேசிய வர்களுக்கெல்லாம் சங்கதியைக் கூறினன். இலிங்கராஜுப் பிள்ளையின் வீட்டில் தான் பன்முறை சந்தித்த ஒரு பிரபு வைக் கண்டபோது அவரிடம் சங்கதியைக் கூறினன். அவர் அவனைப் பிரபுக்களின் சங்கத்தில் ஒரு அவயவியா கச் சேர்த்துக்கொள்வதாய்க் கூறினர்.

இரவு கழிந்தபின் மச்சநாதன், காலையிலெழுந்து தன் வேலைகளை முடித்துக்கொண்டு இலாயர் ஆபீசுக்குச் சென் றதும் இலாயர், "ஆஸ்தியைப்பற்றியும் பட்டத்தைப் பற் றியும் நோடீஸ் கொடுக்க வேண்டிய வர்களுக் கெல்லாம் யாவும் எழுதி யுனது கையொப்பத்திற்கு ஆயத்தமாக விருக்கின்றன" என்றான். மச்சநாதன் உடனே அவற் றில் கையொப்பம் வைத்ததும் இலாயர் அவற்றை யெடுத் துக்கொண்டு தன் பிரதம இலிகிதனை யழைத்து அவற் றைக் கொடுத்து "இவற்றைச் சேர்ப்பிக்க வேண்டிய விடங்களில் சேர்ப்பித்துவிடும்" என்று கட்டளையிட்டார்.

பிரதம இலிகிதனாகிய தம்புசாமிப்பிள்ளை அவற்றை யெடுத்துக்கொண்டு சென்றதும் இலாயர் மச்சநாதனை நோக்கி, மேஜைமே லிருக்கும் பத்திரங்க ளடங்கிய கட் டைக்காட்டி "இதோ இவைகளியாவும் உனது விஷயத் தைச் சேர்ந்தவைகள். இவைகளை யெல்லாம் நீ வாசித்து அறிந்துகொள்ளவேண்டும்" என்றான்.

மச்சநாதன்:—"என்னை நேரில் இவற்றைப்பற்றி விசாரிப் பார்களோ?" என்றான்.

வேலாயுதம் பிள்ளை ஆம் என்றதும் மச்சநாதன் "அப்படியாயின் நான் இவற்றை யெடுத்துக்கொண்டு போய் சாவதானமாக வாசிக்கிறேன்" என்றான். இலா யர் அவ்வாறே செய்யும்படி கூறியதும் மச்சநாதன் அவற்றை யெடுத்துக்கொண்டு சென்றான்.

மச்சநாதன் வீட்டிற்குச் சென்றபோது அவன் மனைவியாகிய ஞானம்பாள் அன்று காலைப் பத்திரிகையை வாசித்துக்கொண்டிருந்தாள். அவள் முகத்தில் ஒருவிதச் சந்தோடமான பிரகாசம் சொலித்துக்கொண்டிருந்தது. ஏனெனில் அப்பத்திரிகையில் அடியிற்கண்ட விஷயம் பிரசுரிக்கப்பட்டிருந்தது.

ஓர் ஜமீன்

"பல வருடங்களாக வாரிசுதார் யாரென்று அகப்படாமலிருந்த ஆத்தூர் ஜமீனுக்கும் அப்பட்டத்திற்கும் மச்சநாதர் என்பவர் இப்போது சரியான வாரிசுதாரராகத் தோன்றியிருக்கிறார். சீக்கிரத்தில் அப்பட்டமும் ஜாகீரும் அவருக்கு அளிக்கப்படுமென்று தெரிகிறது"

முன்னாள் மச்சநாதனை வழியில் காண்கிறவர்களிடமெல்லாம் இதைப்பற்றிப் பறை யறைந்துகொண்டிருந்தானென்று கூறினோமல்லவா. அதைக் கேட்டவர்களில் ஒருவன் பத்திரிகைக்குச் சமாசாரம் எழுதுவோன். அவனே இதைப் பிரசுரம் செய்துவிட்டான். இரண்டொரு நாட்களுக்குள் இவனைக் காணும் நண்பர்களெல்லாம் பிரபுவேயென்றழைக்கத் தொடங்கி விட்டார்கள். பிரபுக்களின் ஒரு சங்கத்தில் இவனையும் ஒரு பிரபுவாய்ச் சேர்த்துக் கொண்டார்கள். மச்சநாதன் நான் இன்னும் பட்டத்தைப் பெறவில்லை யென்றபோது, அவர்கள் "ஆ இப்போது நடக்கவேண்டியது வீண் சடங்கேயன்றிவேறில்லை. இப்பட்டம் தங்களுக்கு முன்னமே யுரியது. ஆனால் தாங்கள் அதை யறியாமலிருந்து விட்டீர்கள்" என்றார்கள்.

மச்சநாதன் " ஆம் இப்பட்டம் நமக்குப் பூர்வீகமாகவே சொந்தந்தானே. இப்போதும் இவர்கள் கூறுகிறபடி நமக்கு இப்பட்டமளிக்கச் சில சடங்குகள்தானே நடக்கவேண்டும். அப்படி யிருக்க நாம் ஏன் இப்போதே

அப்பட்டத்தை யேற்றுக்கொள்ளலாகாது. ஆயினும் இலாயரின் அனுமதிபெற்றுச் செய்வதே நல்லதென்று எண்ணிக்கொண்டு உடனே அவர் ஆபீசுக்குச் சென்று சங்கதியைக் கூறினன்.

வேலாயுதம்பிள்ளை சற்றுநேரம் சிந்தித்துப் பிறகு அவ்வாறே யனுமதி யளித்தான். மச்சநாதன் மிக்க சந்தோஷத்தோடு அங்கிருந்து வீட்டிற்குச் சென்று தன் மனைவிக்கு மிகச் சந்தோஷத்தோடு சங்கதியை யறிவித்தான். வேலைக்காரருக்குக் குறிப்பாக விஷயத்தைத் தெரிவித்ததே, அவர்கள் மச்சநாதனைப் பிரபுவே யென்றும், ஞானம்பாளைச் சீமாட்டியே யென்றும் அழைக்கத் தொடங்கினர்கள். அன்று அவ்வீட்டிலுள்ள அனைவரும் மிக்க ஆனந்தத்தோ டிருந்தார்கள்.

பின்னும் ஐந்தாறு நாட்கள் கழிந்தன. அதற்குள் இலாயர் அனுப்பிய நோட்டீஸ்களுக்கு அனுகூலமான விடைகளே வந்தன. அவர்கள் பத்திரங்களைக் கொண்டு வந்து ருசுப்படுத்தியதே ஜாகீர் பூமியும் பட்டமும் அளித்து விடப்படும் என்று விடையளித்தார்கள். கடைசியில் இலாயரும் மச்சநாதனும் பத்திரங்களை யெடுத்துக் கொண்டு நேரில்சென்று அதிகாரிகளிடம் விஷயத்தை ருசுப்படுத்தவேண்டிய நாள் வந்துவிட்டது. அன்று மச்சநாதன் காலை சரியாகப் பத்துமணிக்கு இலாயரிடம் செல்ல வேண்டுமென்று ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது.

மச்சநாதன் அவசரத்தோடு அரைமணிநேரம் முன்னுடி சென்றுன். அவன் ஆபீசுக்குள் நுழைந்தபோது முன் அறையில் ஒருவருமில்லை. நகல் எழுதும் இலிகிதன் சிற்றுண்டி யருந்தச் சென்றிருந்தான். வெளிவேலை செய்கிறவனும் எங்கோ சென்றிருந்தான். ஆகையால் மச்சநாதன் நேராய்த் தன் மாமனுரிருக்கும் அறையை நோக்

கிச் சென்றான். அவன் மனம் பூரண சந்தோஷத்தி லிருந்தது.

மச்சநாதன் இலாயரின் அறையை நெருங்கும்போது உள்ளே இருந்து பேசும் சத்தம் அவன் செவிகளில் விழுந் தது. பிரதம இலிகிதனாகிய தம்புசாமிப்பிள்ளை சாதாரண மாக எப்போதும் தாழ்மையாகவும் மரியாதையாகவுமே தன் எஜமானிடம் பேசுகிறவன். இப்போது அவன் பேசும் மாதிரியையும் வார்த்தைகளையும் கேட்டதே மச்ச நாதன் திடுக்கிட்டு வெளியிலேயே நின்றான். அறையின் கதவு பூரணமாக மூடப்பட்டிருக்கவில்லை.

அச்சமயம் தம்புசாமிபிள்ளை "வேலாயுதம்பிள்ளை இதுவே என் நிபந்தனை. கட்டாயம் பத்தாயிரம் பவுனும் கொடுத்தே தீரவேண்டும். ஒரு காசு குறைவானாலும் நான் சம்மதிக்கமாட்டேன்" என்றான். மச்சநாதன் இம் மொழிகளைக்கேட்டதும் திடுக்கிட்டு நின்றான். உடனே பின் கண்ட சம்பாஷணை யவன் செவிகளில் விழுந்தது.

இலாயர்:—சுஸ் மெதுவாய்ப் பேசு. நியாயமாகக் கேள்.

தம்புசாமி:—நான் நியாயமாகத் தான் கேட்கிறேன். நீர் கூறும் அற்பத் தொகையாகிய ஐயாயிரம் பவுன்க ளுக்காக நான் பெரிய ஆபத்திற்குத் துணியமாட் டேன். என் நிபந்தனைக்கு நீர் ஒப்புக்கொள்ளா விடின் எல்லா விஷயங்களையும் பகிரங்கப்படுத்தி விடு வேன். இவ்வளவே. கள்ளப்பத்திரங்கள் சிருட்டிக் கப்பட்டன. இப்போது பொய்ச்சாட்சியும் கூற வேண்டும்.

இலாயர்:—உன் புண்ணியத்திற்கு மெதுவாகப்பேசு. நான் எவ்வளவு பணச்செலவு செய்திருக்கிறேன். எவ் வளவு பிரயாசை யெடுத்துக்கொண் டிருக்கிறேன்.

நாம் இருவரும் சமரசமாகப் போய்விடலாம். ஏழாயிரம் கொடுத்துவிடுகிறேன். இது உண்மை.

இலிகிதன்:—“அதெல்லாம் முடியாது. பத்தாயிரத்தில் ஒரு காசு குறைந்தாலும் நான் ஒப்பமாட்டேன். சீக்கிரம் உமது மனதைச் சம்மதப்படுத்திக்கொண்டு ஒப்புக்கொள்ளும். இன்றேல் மச்சநாதர் வந்ததே, “நடந்ததெல்லாம் அடியோடு பெருமோசம். உண்மையில் நீர் பிரபுவுமல்ல ஜமீன்தாருமல்ல” என்று கூறிவிடுவேன்” என்ருன்.

மறுநிமிடம் கதவு திறக்கப்பட்டதும் மச்சநாதன் உள்ளே வந்தான். அவனைக் கண்டதே லாயரும் அவன் இலிகிதனும் இடி விழுந்தவர்கள் போலாஞர்கள். ஏனெனில் மச்சநாதனுடைய முகம் சவம்போல் வெளுத்து விட்டிருந்தது. அவன் ஆவி சோர்ந்தவன்போல் ஆசனத்தில் சாய்ந்துவிட்டான். அங்கிருந்த இருவரையும் மாறி மாறிப்பார்க்கிருனேயன்றி வாய்திறக்கச் சற்றுநேரம்வரையவனுல் கூடவில்லை. இலாயர் தம்புசாமியை “அட சண்டாளனே! உன் ஆத்திரமான மூடத்தனத்தால் என்ன செய்துவிட்டாய் பார்த்தாயா? என்று கேட்பதுபோல் உற்று நோக்கி, நீ வெளியில் செல் என்று சமிக்கை செய்தான். தம்புசாமி யுடனே சென்ருன்.

அதன் பிறகு மச்சநாதன் பெருமூச்சோடு “ஆ! கடவுளே! எல்லாம்கனவு. கடைசியில் யாவும் பெருங்கனவாக முடிந்தது. கனவுமட்டுமல்ல படுமோசக்கொள்ளை. ஓ வேலாயுதம்பிள்ளை! நீ முதல்தரமான கள்ளப்பயல்” என்ருன்.

இலாயர்:—நான் உன் மாமனுர் என்பதை நினைத்துப் பேசு.

மச்சநாதன்:—மாமனுரா யிருந்தாலும் சரி, வேறு யாராக

விருந்தாலும் சரி. நீ சுத்த கள்ளப்பயல் கள்ளப் பயலே.

இலாயர்:—நான் கள்ளன் என்றால் உன்னையே கள்ளன் என்று நான் கூறுவேன்.

மச்சநாதன்:—நான் ஒருகாலும் கள்ளனல்ல. அதற்கு முதல் அத்தாட்சி நான் இந்த ஆஸ்தி பட்டம் முதலிய ஒன்றையுமே யேற்றுக்கொள்ளப் போவதில்லை.

இலாயர்:—நீ யேற்றுக்கொள்ளவே வேண்டும். அதனால் இலாபமடைவாய். நீ என் கையில் சிக்கிக்கொண்டிருக்கிறாய்.

மச்சநாதன்:—இல்லை இல்லை. ஒருபோதும் அப்படிக் கருதாதே. நாட்டில் நீதியிருக்கிறது. அய்யோ கடவுளே! இத்தகைய படுமோசத்தில் எப்படி சிக்கிக்கொண்டேனோ? என்ன முட்டாள்தனமாய் ஏமாந்துமயங்கிப் போனேன்! ஆயினும் இந்த வினாடிமுதல் இவ்விலங்கிலிருந்து விடுவித்துக்கொள்வேன். நான் என் மனசாட்சி யறியப் பூரணமாக நிரபராதியே.

இலாயர்:—நீ சாந்தமாய் நான் கூறுவதைக்கேள். இந்த விஷயம் எப்படிப்பட்ட நிலைமையி லிருக்கிற தென்பதைக் கூறுகிறேன். நிதானமாகக்கேள். ஆதியிலிருந்து படிப்படியாக இந்த விவகாரம் ஒவ்வொன்றும் எப்படி நடந்திருக்கிற தென்பதைச் சிந்தித்துப்பார். முதலாவது இதனால் பெருத்த இலாபமடைகிறது யார்? நாம் இருவரும் என்ன நிலைமையி லிருக்கிறோம் தெரிகிறதா? இலாயர், கட்சிக்காரன் என்ற சம்பந்த முடையவர்களாக விருக்கிறோம். இவ்வாறு என் மூதாதையின் ஆஸ்தியிருக்கிறது, அதற்கு நான் தான் பாத்தியஸ்தன்; இதற்கு வேண்டிய இரண்டொரு அத்தாட்சிகளைச் சம்பாதித்தால் அந்த ஆஸ்

தியும் அப்பட்டமும் எனக்குக் கிடைக்கும் என்று நீ கூறினாய். நான் உன் வார்த்தைகளைப் பூரணமாக நம்பிக்கொண்டு உன் செலவிற்கு வேண்டிய தொகைகளைக் கொடுத்தேன். அவ்வாறு நம்பியே யென் புத்திரியையும் உனக்குக் கொடுத்தேன். இப்போது இவையாவும் மோசமென்றால் நான் உன்னைநம்பி மோசம்போய்விட்டேன்.

நடந்திருக்கிற விவகாரங்களைக் கவனி; நீயே விளம்பரங்களை யெழுதிக் கொண்டுபோய் பத்திரிகை களுக்குக் கொடுத்தாய். அவை வந்தபின் நீயே யவற்றிற்குப் பதில் எழுதியனுப்பினாய். நீ யிந்த விஷயத்தை யென்னிடம் ஒப்புவிக்க விரும்புவதாகவும் அதற்காக உனக்குக்கிடைக்கும் தொகையில் நூற்றுக்கு இருபதுவீதம் எனக்களிக்கச் சம்மதித்த தாகவும், என் இலகிதரிடம் உன் முன்னால் தானே கூறினேன். நீ அவ்வாறே எனக்குப் பத்திரம் எழுதிக்கொடுத் திருக்கிறாய். அப்பத்திரமே அதை நிரூபிக்கும்.

பிறகு இதற்கு அவசியமான குறிப்புகள், பத்திரங்கள் யாவும் உன் கரத்தாலேயே யெழுதப்பட் டிருக்கின்றன. நீயே வெளியில் யாவருக்கும் இதைப்பற்றிக் கூறியிருக்கிறாய். இப்போது இதில் கள்ளப் பத்திரங்கள் சிருட்டிக்கப்பட் டிருக்கின்றனவெனில் யாவும் நீ யெழுதியவைகளே. இப்போதுபார் விஷயம் எப்படி யிருக்கிறது. நான் உன்னால் ஏமாற்றப்பட்டதாய் ருசுப்படுத்த என்னால் முடியுமா முடியாதா வென்பதைச் சிந்தித்துப் பார்—" என்றான்.

இவையாவும் கேட்டதே மச்சநாதன் வியப்பும் திகிலும் பிரமையுமடைந்து விட்டான். இலாயர் வேலாயுதம் பிள்ளையின் யோக்கியதை யித்தகையதென இப்போது

தான் அவனுக்குத் தெரிந்தது. சிந்தித்துப் பார்த்தபோது, அவன் கூறியயாவும் உண்மையே யென்றும் தானே அவனிடம் சிக்கிக்கொண் டிருப்பதாகவும் நன்றாய் விளங்கியது. அவன் மனதில் பெருந்திகிலும் வேதனையும் உண்டாகிவிட்டன. இன்னது கூறுவதென் றுணராது பிரமையடைந்திருந்தான்.

மச்சநாதனுடைய நிலைமையைக் கண்ட இலாயர் "ஆ! இப்போதிவன் விஷயம் இப்படி யிருக்கிறதென் றுணர்ந்தான். இனி பேசாமல் ஒப்புக் கொள்வான்" என்று மனதிற்குள் சிந்தித்துக்கொண்டு அவனைநோக்கி,

"முட்டாள் தனமாக வீண்யோசனை செய்யாதே. வலியவருகிற ஸ்ரீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளி விடாதே. பிரபுப்பட்டம் இருப்பது எவ்வளவு சந்தோஷம். திரண்டசெல்வமும் கூடவிருந்தால் உலகில் எத்தகைய மகிழ்ச்சியோடு வாழலாகும் என்பதை யோசித்துப்பார். உன்வரையில் இது சந்தோஷமல்ல. உன் மனைவியையும், புத்திரியையும் நினைத்து நட. பேசாமல் ஒப்புக் கொள். உனக்கொரு கஷ்டமுமில்லை" என்றான்.

மச்சநாதன்:—"அய்யோ! கடவுளே! என் அன்பார்ந்த மனைவி, என் அருமைக் குழந்தை, இவர்கள் மரண பரியந்தம் என்கணவன், என்தந்தை சுத்த அயோக்கியக் கள்ளப்பயல் என்று தானே நம்பவேண்டும். அதுமட்டுமல்ல, எப்போதேனும், எச்சமயத்திலேனும் ஒரு அற்பவிஷயத்தால் இக்களவும் படுமோசமும் வெளிக்கு வந்துவிடும். அப்போது என்ன அவமானம், பிறகு இராஜதண்டனை, என்னமானக்கேடு, அய்யோகடவுளே, ஒருகாலு மிதற்கு ஒப்பவேமாட்டேன். நீ என்ன செய்தாலும்செய்துகொள்" என்று தைரியத்தோடு கூறிவிட்டான்.

இலாயர்:—ஆகா கட்டாயம் செய்தே தீருவேன். இப்போது நான் எத்தகைய மனிதனென்று உனக்குப் பூரணமாக விளங்கிவிட் டிருக்கும். ஆரம்பத்தி லிருந்தே நான் என் நலத்தையும் க்ஷேமத்தையும் கவனித்தே யெதையும் செய்பவன் என்று தெரிந்து கொள். நீ இப்போ திதற்குச் சம்மதிக்கா விடின் நீ எந்தப்பக்கம்திரும்பினும் உனக்கு ஆபத்தேயென்று நன்ருய் அறிந்துகொண்டு நட. முதலாவது நீ எனக்குப் பெருந்தொகையான பணம் கொடுக்கவேண்டும். அதற்குப் பத்திரங்கள் என்னிடம் இருக்கின்றன. நான் உடனே யவற்றைத் தாக்கல்செய்து உன்னைக் கள்ளர் சிறைச்சாலைக் கனுப்பிவிடுவேன். ஏனெனில் நீ மோச எண்ணத்தோடு என்னிடம் பணம் வாங்கி யிருக்கிருய். இதன்றி மற்ற விஷயத்திற்கும் தண்டனையடைவாய்.

இப்போது உனக்குத் தெய்வச் செயலாய்க் கிடைத்திருக்கும் நல்ல அதிர்ஷ்டத்தைத் தள்ளிவிடாதே. மச்சநாதம்! அப்படி மூடத்தனமாக நடந்துகொள்ளாதே. இதனுல் அழிந்துபோவதுநீமட்டுமல்ல. உன் மனைவியும் குழந்தையும் சொல்லொணுத தரித்திரத்தையும் அதனுல் ஏற்படும் கஷ்டங்களையும் அனுபவிப்பார்கள். நீ யொருசமயம் நான் செல்வவந்தன் என்று எண்ணிக்கொண் டிருப்பாய். உண்மை யப்படியல்ல. நான் இப்போது சுத்த தரித்திர நிலைமையிலிருக்கிறேன். மேலுக்கு ஏதோ செல்வவந்தன் போல் தோன்றுகிறது. கொஞ்ச நஞ்சம் இருந்ததையும் இந்த விஷயத்தில்தான் செலவழித்து விட்டேன்.

இப்போது உன் விஷயத்தில் எனக்குப்பணம் வந்தால்தான் நான் தப்புவேன். இன்றேல் எனக்கு அடியோடழிவே. நான் அழியும்போது உன்னை விடமாட்

டேன். என் புத்திரியல்ல, பௌத்திரியல்ல ஒருவரையும் கவனிக்கமாட்டேன். தெரிகிறதா? நீ பேசாமல் உன்மனதைத் தைரியப் படுத்திக்கொண்டு யாவும் ஏற்றுக்கொள். க்ஷேமமாக விருப்பாய். இச்சங்கதி யொருகாலும் வெளிவராது. அதற்கு நான் சவாப்தாரி. எல்லா விஷயங்களும் சரியாக அமைந்திருக்கின்றன. நீ கொஞ்சங்கூட இதற்குப்பயப்பட வேண்டியதே யில்லை. உன் மூடத்தனத்தால் நீயே வெளியிட்டால்தான் வெளியிடலாம். முடிவாய்க் கூறிவிடு. ஒப்புக்கொள்கிறாயா? என்ன சொல்கிறாய்?'' என்றான்.

மச்சநாதன் தனக்குள் சிந்தித்துக் கொண்டான். தான் பூரணமாக இவனிடம் சிக்கிக்கொண் டிருப்பதை யறிந்து கொண்டான். அதன்மேல் "நான் உடனே பதில் கூற முடியாது; சிந்தித்துத்தான் கூறவேண்டும். அதுவரையில் இதில் இன்னும் ஒரு அடிகூட எடுத்துவைக்க மாட்டேன்'' என்றான்.

இலாயர்:—"அப்படியே செய். வீட்டிற்குச் சென்று ஆலோசனைசெய்து கூறு'' என்றான்.

மச்சநாதன் உடனே எழுந்துசென்றான். அவன்சென்றதே இலகிதனுகிய தம்புசாமி உள்ளே சென்றான். இலாயர் அவனை நோக்கி "நீ செய்தவேலையின் பயனைப்பார்த்தாயா?'' என்று மிக்க வெறுப்போடு கேட்டான்.

தம்புசாமி:—எல்லாம் அடியோடு கெட்டுப்போய் விட்டதோ?

இலாயர்:—இல்லை; இல்லையென்றேநினைக்கிறேன். முடிவில் எல்லாம் சரிப்பட்டுப் போய்விடும். அவன் தன் மனைவியிடம் ஆலோசனை செய்யப் போகிறான். அவளிடம் யாவும் கூறுவான்.

தம்புசாமி:—அந்தம்மாள் சரியாகவேகூறுவார்கள். பேசாமல் ஒப்புக்கொள்ளும்படிக்கே புத்திபுகட்டுவார்கள்.

இலாயர் :—“ஆம் ஆம். அவள் நமக்கு அனுகூலமாகவே பேசுவாள். ஆயினும் நான் முன்னடிசென்று அவளிடம் கலந்து பேசவேண்டும். அவர்கள் பேசும் போதாவது அருகிலிருக்க வேண்டும். உடனே ஒரு வண்டி வரவழை. நீபோய் பத்திரங்களோடு நானும் மச்சநாதனும் நாளைக்கு வருகிறோ மென்றுகூறு. இன்று வரக்கூடாததற்கு ஏதேனும் தக்ககாரணம் கூறிவிடு'' என்றான். இலிகிதன் உடனே சென்றான்.

---

## 5-வது அத்தியாயம்.

### மோச எண்ணத்தின் பயன்—தற்கொலையும் குழப்பங்களும்.

இலாயர் வேலாயுதம்பிள்ளை மச்சநாதன் வீட்டிற்குச் செல்லும்போது, மச்சநாதன் இன்னும் அங்கு வரவில்லை. அவன் மனைவி மட்டுமே யிருந்தாள். இலாயர், மச்சநாதன் சுமார் ஒன்றரை வருடத்திற்கு முன் தன் வீட்டிற்கு வந்தது முதலே அவனுக்கு இத்தகைய பட்டமும் ஆஸ்தியும் இருக்கின்றனவென்று இரகசியமாகத் தன் புத்திரிக்குக் கூறியிருக்கிறான். அவன் ஞானம்பாளை மணம் செய்யுமட்டும் அந்த உண்மைத் திரமான தென்று அவனுக்குக் கூற லாகாதென்பது இலாயரின் ஆலோசனை. அவன் புத்திரியும் தன் தந்தை அனுமதி யளிக்கு மட்டும் மச்சநாதனிடம் அதைப்பற்றி யொன்று மறியாதவள் போலவே யிருந்தாள்.

மச்சநாதனுக்கு ஆரம்பத்திலேயே தனக்குப் பட்டமும் செல்வமும் வருவது நிச்சய மென்று தெரிந்து விட்டால், சே! நாம் ஒரு செல்வப்பிரபுவின் புத்திரியை மணம்

புரிந்துகொள்ளலா மென்று கருதிவிடுவான் என்பதே இலாயரின் ஆலோசனை. அதோடு இலாயர் மனிதர் சுபாவத்தை யறிந்துகொள்ளக் கூடிய சக்தி வாய்ந்தவன். மச்சநாதனிடம் அவன் அப்போதைக் கப்போது பேசிய மாதிரியால் அவன் யோக்கியதை தவறி நடக்கிறவனல்ல வென்று அறிந்து கொண்டான். ஆகையால் கலியாண மான பின்பு கூட அவன் இன்னும் சரியாய்ப் பாசபந்தத்தில் சிக்கிக்கொள்ள வேண்டு மென்று எதிர் பார்த்துக் கொண் டிருந்தான். இப்போது அவனுக்கு ஒரு புத்திரி பிறந்திருப்பதால், புத்திரியின்மேல் இருக்கும் வாஞ்சையால் எதற்கும் சம்மதிப்பான் என்று இப்போது முடிவாகச் சங்கதியை வெளிப்படுத்தினன்.

ஞானம்பாளுக்கு அவள் தந்தையின் படுமோசமான கள்ளச்செயல் அப்போதுதான் பூரணமாகத் தெரிந்தது. இது மட்டுமல்ல. தன் தந்தையின் உண்மையான நிலைமையும் அப்போதுதான் தெரிந்தது. முதலில் யாவும் கேட்டதே அவள் பெருந் திகிலடைந்தாள். ஆனல் தன் கணவன் வரையில் அவள்கற்புடைய மாதேயாயினும், தரித்திரத்தைச் சகிக்கும் தைரியமுடையவளல்ல. பிறந்ததுமுதல் செல்வத்தை யனுபவித்தவள். ஆகையால் தன் தந்தையோடு சுமார் அரைமணி நேரம் சம்பாஷித்தபின் "நான் அவரைச் சரிப்படுத்திவிடுவேன். அவர் என் வார்த்தைக்கு மிஞ்சிப் போகமாட்டார். நீர் பயப்பட வேண்டாம்" என்றுள்.

இருவரும் பின்னும் நெடுநேரம் காத்திருந்தும் மச்சநாதன் வரவில்லை. ஞானம்பாள் தன் தந்தையை நோக்கி "அப்பா! நீர்வந்து சுமார் இரண்டுமணி நேரமாகியும் இன்னும் அவர் வரவில்லையே" என்றுள். மறு

கிமிடம் யாரோ மாடிமேலேறிவரும் சத்தம் கேட்டது. ஞானம்பாள் "ஆ! அவர்தான் வருகிறார்" என்றாள்.

உடனே மச்சநாதன் உள்ளேவந்தான். மனைவி யவனைநோக்கி "ஆ! வாருங்கள் வாருங்கள். தாங்கள் இன்னேரம் எங்கே சென்றிருந்தீர்கள்" என்றாள். மச்நாதன் தன் மாமனாரும் அங்கு முன்னமே வந்திருப்பதைக் கண்டதும் "ஆ!" என்றான். அவன் அவ்வளவு நேரம் தனியே யுலவிக்கொண்டே சிந்தித்துக் கடைசியில் மனதை யொருவாறு திடப்படுத்திக்கொண்டான். அவன் பார்வை யொரு மாதிரியாக விருந்தது.

ஞானம்பாள் அவனை நோக்கி "அய்யோ ஏன் அப்படிப் பார்க்கிறீர்களே?" என்றாள். மச்சநாதன் "ஆ! உனக்கு எல்லாம் தெரியும்போ லிருக்கிறது" என்றான். மனைவி "ஆம். எல்லா சங்கதியும் தெரியும். ஏன் இப்படிப் பார்க்கிறீர்? நீர் என்ன செய்ய உத்தேசித்திருக்கிறீர்?" என்றாள்.

மச்சநாதன் :—"என்னை யென்ன செய்யச் சொல்கிறாய்" என்றான்.

மனைவி :—"ஓ! என் அருமை நாயகரே! என்னைப் பற்றி எனக்கு அக்கரையே யில்லை. தங்களைப்பற்றியும் என் புத்திரியைப்பற்றியுமே தாங்கள் மனமிரங்கி இதை அற்ப பரித்தியாக மாகவே கருதவேண்டும்" என்றாள். மச்சநாதன் "ஆ! ஞானம்பா! ஞானம்பா! நீயா இப்படிக் கூறுகிறாய்? அடடா! கடவுளே! கடவுளே! என்னைக் கள்ளனாகவா நடந்துகொள்ளச் சொல்லுகிறாய்?" என்றான்.

ஞானம்பாள் "இது முட்டாள்தனம்" என்றாள். இனி கடுகடுப்பாய்ப்பேசிப் பார்க்கலாமென்று கருதினாள்.

அதற்குள் மச்சநாதன் தன் மாமனாரை நோக்கி

"அடசண்டாளனே! உன் சொந்தபுத்திரிக்கே இத்தகைய புத்தியா கற்பித்துக் கொடுத்திருக்கிருய்? அடடா! இப்படிக்கூடவா காலம் இருக்கும். இத்தகைய தந்தைகூட உலகத்தி லிருப்பானே!" என்ருன். அவன் அவ்வாறு கூறும்போது அவன் முகத்தில் ஒரு விதக் கம்பீரத் தோற்றம் உண்டாயிற்று. அதைக்கண்ட இலாயர் வேலாயுதம்பிள்ளை ஒன்றும் பேச முடியாமல் திப்பிரமையடைந்து மௌனமாக விருந்தான்.

அச்சமயம் அறையின் கதவு திறக்கப் பட்டதும் இலாயரின் பிரதம இலிகிதஞகிய தம்புசாமிப்பிள்ளை யங்கு வந்து இலாயரை நோக்கி "தாங்கள் நாளைக்கே பத்திரங்களை யெடுத்துக்கொண்டு மச்சநாதரை யழைத்துக் கொண்டு வரலாம் என்று கூறினார்கள்" என்ருன்.

இதைக்கேட்ட மச்சநாதன் ஒருவிதத் தொனியாய் "ஆ! நாளைவரையில் கெடுவிருக்கிறதா!" என்ருன். அவ்வாறு கூறியதும் ஆசனத்தை விட்டெழுந்து வெறிகொண்டவன்போல் வாயிற்படியில் நின்றுகொண் டிருந்த தம்புசாமியைத் தள்ளிக்கொண்டு அதிவேகமாக வெளியிற் சென்ருன்.

இலாயர் :—"ஓ! மச்சநாதம்! மச்சநாதம்! இங்கேவா! இங்கேவா! அய்யோ கடவுளே! அவன் எங்கே செல்கிருன்" என்று திகிலோடு கூவினன். ஞானம்பாள் மிக்க திகிலோடு அலறிக்கொண்டே கூவினள்.

தம்புசாமிபிள்ளை :—"அவர் போகிறமாதிரியை நோக்கத் திரும்பி வருவாரென்று நான் கருதவில்லை" என்ருன்.

இலாயர் "அய்யோ கடவுளே! அவன் ஒரு சமயம் நேராக நமது ஆபீசுக்குச் சென்று அப் பத்திரங்களை

யெல்லாம் அழித்துவிடப் போகிறான். நீ சீக்கிரம் ஆபீசுக்குச் செல்'' என்றான்.

பிரதம இலகிதனை தம்புசாமிபிள்ளை உடனே துரிதமாகச் சென்றான்.

இலகிதன் சென்றதே "இலாயர் அய்யோ! கடவுளே! அவன் என்ன செய்யப் போயிருக்கிறான்?'' என்று கூறிக்கொண்டே எழுந்து அறைக்குள் சென்று ஆவி சோர்ந்தவன் போல் ஒரு மஞ்சத்தில் சாய்ந்து விட்டான்.

அவன் மனக்கலக்கமும் திகிலும் இன்ன தன்மையதென்று கூற முடியாது. அவன் தன் நிலைமையைப் பற்றி மச்சநாதனிடம் கூறிய தென்னவோ உண்மையே. சீக்கிரத்தில் பெருந்தொகை கிடைக்காவிட்டால் அவனுக்கு அடியோடு அழிவு நேரிடும் என்பது திண்ணம். அவனுக்கு அச்சமயம் இன்னது சிந்திப்பது இன்னது செய்வதென்று ஒன்றும் விளங்க வில்லை. ஆகையால் பிரமை பிடித்தவன்போல் விழித்துக் கொண்டிருந்தான்.

ஞானம்பாள் மனதில் உண்டான துயரம் அளவு கடந்தது. அவளுக்குத் தன் கணவன்மேல் பூரண அன்புண்டு. ஆரம்ப முதலே அவன் நடக்கை மிக்க நேர்மையான தென்று அவள் அறிவாள். ஆனால் அவள் தாய் அவளுடைய சிறு வயதில் இறந்துபோகத் தன் தந்தையால் செல்வத்தோடும் வளர்க்கப்பட்டபடியால் ஏழ்மை நிலைமை யென்று நினைத்தாலே அவள் மனதில் திகில் உண்டாயிற்று. அதனால் "நமது கணவன் நேர்மையான நடக்கை யுடையவ னெனினும் குழந்தைக்காக இந்த ஏற்பாட்டிற்கு ஒப்புக்கொள்வான். அவன் வேணுமென்று இதில் ஒன்றும் செய்ய வில்லையே! எல்லாம் நமது தந்தை செய்த கள்ளத்தனம்தானே. நமது கணவன் இப்போது பேசாமல் பட்டத்தையும் செல்வத்தையும் ஏற்றுக்

கொள்ள வேண்டியதுதானே'' என்று இவ்வாறு கருதியே அவனிடம் அம்மாதிரி கூறினுள்.

மற்ற எல்லாவிஷயங்களிலும் உத்தம குணமுடையவளானதால் இப்போது சற்றுநேரம் சிந்தித்ததே அவள் குணம் பூரண மாறுதலடைந்தது. மூடுபனியி லிருந்த சூரியன் அப்பனியை யழித்தெழுந்த போது எவ்வாறு பிரகாசிக்கின்றதோ அவ்வாறே அவளுக்கு அப்போது தன் கணவனுடைய உயர்வான நடக்கையும் குணமும் அவள் மனதிற்குப் புலப்பட்டன. ஆ, "பழிமலைந் தெய்திய வாக்கத்திற் சான்ருேர் கழிநல் குரவே தலை'' என்று தமிழ்மறை கூறுவதுபோல் சத்தியத்தைக் கடைப்பிடித்து திரண்ட செல்வத்தையும் உயர்ந்த பட்டத்தையும் திரணமாக மதித்த நமது கணவரின் பெருந்தன்மையான குணமே புகழத்தக்க தென்றுணர்ந்தாள்.

இத்தகைய மாறுதல் உண்டானதும் ஞானம்பாள் நேராகத்தன் தந்தை சயனித்துக்கொண் டிருக்கு மிடத்திற்குச் சென்று, அவர் எதிரில் நின்று அவர் முகத்தை உற்று நோக்கி,

"தந்தையே! என் கணவருடைய சத்திய நெறியைப்பார்த்தீரா? அவருடைய கம்பீரமான புகழத்தக்க குணம் எத்தகைய தென்று இப்போது உமக்குத் தெரிகிறதா! அய்யோ நான் பெரிய சண்டாளியாய் விட்டேனே. அற்பமாகிய இந்தப் பொருளுக் காசைப்பட்டு அவ்வாறு கூறிவிட்டேனே. அவர்மேல் இதுகாறு மிருந்த அன்பிற்குப் பத்தாயிர மடங்கான அன்பு இப்போதல்லவோ எனக் குண்டாயிற்று. அய்யோ இத்தகைய செல்வத்தோடு வாழ்வதினும் அத்தகைய கணவரோடு பூரண தரித்திரத்தை யனுபவிப்பது தேவபோக மாகுமென்று

18647

அறியாமற் போனேனே. அந்தோ! என் பிராணநாதரே! எங்குபோய் விட்டீர்?'' என்று அலறினாள்.

இலாயர் தன் புதல்வியை நோக்கி "குழந்தாய்! நீ என்மேல் குற்றங்கூற வேண்டாம். உன் கணவன் அந்த ஆத்திரம் தணிந்ததே வருவான், எப்படியும் வருவான். அப்படி வராவிட்டால் அய்யோ கடவுளே! நான் அடியோடழிய வேண்டியதே'' என்றான்.

புத்திரி:—தந்தையே! உமக்கு அழிவு நேர்ந்தால் அது உம்முடைய கொடிய குற்றத்திற்குத் தக்கதண்டனையாகும். என் கணவன் ஒரு பாபமும் செய்யவில்லையே. நீர் ஆரம்பத்திலேயே விஷயம் இம்மாதிரி யிருக்கிறது, உனக்குப் பிரியமா என்று ஒருவார்த்தை மட்டும் கேட்டிருந்தால் அவர் மறுபடி உம்மெதிரில் தலைகாட்டியேயிரார். இப்போது நீர் பயமுறுத்திய தாலேயே அவர் எங்கோ போய்விட்டார். என் கணவரை என்னிடம் கொண்டுவந்து சேரும். என் அன்பார்ந்த குழந்தையின் தந்தையைக் கொண்டுவாரும். அய்யோ கடவுளே என் கணவரை யுயிரோடு பறிகொடுத்து விட்டேனே. அவர் எங்கே வரப்போகிறார்! இல்லையில்லை. அவர் மறுபடிவரப் போகிறதில்லை'' என்று ஆவிசோர்ந்து கீழே உட்கார்ந்து விட்டாள்.

சற்று நேரங்கழித்து எழுந்து நித்திரைசெய்யும் தன் குழந்தையி னருகிற் சென்று அதைப்பார்த்து அழுதாள். அந்தோ உன்தந்தையை நீ காண மாட்டாயோ என்று பிரலாபித்தாள். மறுபடி தன் தந்தையிடம் வந்து என் கணவரைத் தேடியழைத்துவா என்றாள். பிறகு சற்று நேரம் "நமதுகணவர் எங்கேனும் சென்று உட்கார்ந்து சிந்தித்து ஆத்திரம் தணிந்தபின் வருவார் என்று தனக்குத்தானே சமாதானம் கூறினாள். ஆயினும் அவள் மன

தில் எதுவோ ஒன்று இருந்துகொண்டு இரகசியமாக உன் கணவன் மறுபடி வரவேமாட்டான்" என்று கூறுவதுபோலிருந்தது. உடனே "அய்யோ கடவுளே! இல்லையில்லை அவர் வரவேமாட்டார்" என்று புலம்பினள்.

இலாயர் இரவு நெடுநேரம்வரை தன் புத்திரியிடமேயிருந்தான். சுமார் இரவு ஒருமணிக்கு தம்புசாமிப்பிள்ளை வந்து மச்சநாதர் நமது ஆபீசுக்குச் செல்லவில்லை என்று கூறினன். மறுநாள் காலை மச்சநாதனை நகரமெங்கும் தேடினர்கள், அடுத்தநாளும் தேடினர்கள். அவன் எங்கும் அகப்படவே யில்லை. அவனை யாரும் கண்டதாகவே கூறவில்லை. ஞானம்பாள் நமது கணவர் எங்கேனும் சென்று பிராணத்தியாகம் செய்துகொண்டாரோ என்று நினைக்கும்போது, அவளுக் குண்டாகும் துயரத்திற்கும் தன் தந்தைமே லுண்டாகும் கோபத்திற்கும் அளவேயில்லை.

பிறகு பத்திரிகைகளில் மச்சநாதன் அங்க அடையாளங்களைக்கூறிப் பிரசுரங்கள் செய்தார்கள். ஞானம்பாள் "தாங்கள் என்னிடம் வந்து சேராவிட்டால் நான் மடிவது நிச்சயம். நான் உமது பிரியப்படி நடப்பேனேயன்றி வேருெருவரைப் பற்றியும் எனக்கு அக்கறையில்லை" என்று விளம்பரப் படுத்தினள். எதற்கும் பதிலேயில்லை.

இதற்குள் சுமார் ஒரு வாரங்கழிந்தது. ஒரு நாட் காலை இலாயர் வேலாயுதம் பிள்ளையின் வீட்டில் பெருங் குழப்பமும் துக்கமுமாக விருந்தது. சங்கதியென்னவெனில், இரவு இலாயர் தற்கொலை புரிந்துகொண்டார். மரண விசாரணையில் அவருடைய செல்வநிலைமை மிக்க ஆபத்தான நிலைமையி லிருப்பதாகத் தெரியவந்தது. வேறு சங்கதியொன்றும் வெளிவரவில்லை.

ஞானம்பாள் தன் தந்தையின் விஷயங்களைப்பற்றித்

தனக்கொன்றுமே தெரியா தென்று கூறிவிட்டாள். அவள் தமக்கையாகிய உலக நாயகிக்குத் தன் தந்தை யித்தகைய நிலைமையி லிருக்கிறு ரென்பது அப்போது தான் தெரிய வந்தது. உலக நாயகியின் கணவனுக்கும் அப்போது தான் தெரியவந்தது. மச்சநாதன் விஷயத் தைப்பற்றி அவனுக்கு அவ்வாறு ஆஸ்தி கிடைக்கும்போ லிருக்கிற தென்று மட்டும் அவர்களுக்குத் தெரியுமே யன்றி வேறொரு சமாசாரமும் தெரியாது.

வேலாயுதம்பிள்ளை யிதுகாறும் மிக்க செல்வவந்தன் போல் நடித்து வந்தாலும், இப்போது தற்கொலை புரிந்து கொண்டபின் அவன் நிலைமை நேர் மாருக விருப் பதாலும், இவன் ஏதோ குற்றங்களையும் செய்திருக்க வேண்டு மென்று யாவருக்கும் அய்ய முண்டாயிற்று. மச்சநாதன்பட்டத்தையும் செல்வத்தையும் பெறப்போவ தாய்ப் பாங்கிக்கும் மந்திரிமார் சபைக்கும் எச்சரிக்கை செய்திருக்கிற படியால், அது பகிரங்கமாய் யாவருக்கும் தெரிந்திருந்தது. இப்போது மச்சநாதன் காணமற் போய் விடவே அந்த விஷயத்தில் ஏதோ பிசகிருக்க வேண்டு மென்று தோன்றியபடியால் மறுநாள் அதிகாரிகள் இலா யரின் ஆபீசுக்குச் சென்று மச்சநாதன் விஷயத்தைப் பற் றிய பத்திரங்களைக் காட்டும்படி கேட்டார்கள். இலிகிதனு கிய தம்புசாமி தன் க்ஷேமத்தையும் கருதி "அப்பத்தி ரங்களனைத்தும் இலாயர் தமது வீட்டிலேயே வைத்துக் கொண்டிருந்தார். இப்போதவை யிங்கில்லை யென்ருல், அவர் தற்கொலை புரிந்துகொள்ளு முன்பே அவற்றைப் பெரும்பாலும் அழித்து விட்டிருப்பார்" என்ருன். அத ஞல் அதைப்பற்றி ஒரு சங்கதியும் வெளிவரவில்லை.

ஞானம்பாளுக்கு இடிமேல் இடி விழுந்தமாதிரியாய் விடவே அவளால் துயரத்தைச் சகிக்க முடியவில்லை. அம்

மனே வியாதியே ஒரு வருடத்திற்குள் அவளை மடியச் செய்தது. அவள் தன் தந்தையின் குற்றத்தைத் தன் தமக்கையிடங்கூடக் கூறவில்லை. அவளுடைய குழந்தை அழகாம்பாள் இப்போது தாய்தந்தை யிருவரையு மிழந் தவளாய் விட்டாள். உலகநாயகியும் அவள் கணவனும் அழகாம்பாளை யெடுத்துக் கொண்டுபோய்த் தங்களிடம் வைத்துக் கொண்டார்கள். அவர்களுக்கு ஒரே யொரு பெண்குழந்தை யுண்டு. அது அழகாம்பாளுக்கு இரண்டு மூன்று மாதங்களே மூத்தது. உலகநாயகி தன் தங்கை யின் கியாபகச் சின்னமாக அழகாம்பாளுக்கு அப்பெ யரை மாற்றிவிட்டுத் தன் தங்கையின் பெயராகிய ஞா னும்பாள் என்ற பெயரையே சூட்டினுள். அவர்கள் புத் திரிக்குச் செல்வாம்பாள் என்று பெயர்.

உலகநாயகியும் அவள் கணவனும் ஞானம்பாளையும் தங்கள் வயிற்றிற் பிறந்த புத்திரியைப் போலவே பாவித் துச்சற்றும்வித்தியாசம் பாராட்டாமல் பூரண அன்போடு வளர்த்து வந்தார்கள். இவ்வாறிருக்க மூன்று நான்குவரு டங்கள் கழிந்தபின் உலகநாயகியின் கணவன் நளிர் சுரம் கண்டு மரணமடைந்தான். ஆனல் அவனிடம் போது மான செல்வ மிருந்தபடியால் உலகநாயகி இரண்டுபெண் களோடும் நிம்மதியாக வாழ்ந்து வந்தாள்.

---

## 6-வது அத்தியாயம்.

### தகுந்த நட்பும் தகாத நட்பும்.

கடந்த அத்தியாயத்தின் இறுதி வரையில் நமது கதைக்கு நாயகிகளாகிய இருவரின் பிறப்பைப் பற்றிக் கூறியதேயாகும். மேல் நடந்த சம்பவங்களில் சம்பந்தப்பட்ட இரண்டொருவரின் நடவடிக்கைகள் பின்

ஞல் நமது கதையில் நிகழ்வதால் அதை முன்னே யியம்ப வேண்டிய தாயிற்று. ஞானம்பாளும் செல்வாம்பாளு மாகிய சகோதரிகள் நமது கதாநாயகிகள்.

மேற்கண்ட சம்பவங்கள் நடந்து பதினேழு வருடங்கள் கழிந்தன. இடையில் எத்தனையோ பேர் இக்தன்ம பூமியில் ஜனித்தார்கள். எத்தனையோ பேர் இதைவிட்டு விண்ணுலகடைந்தனர். குழந்தையா யிருந்தவர்கள் யௌவனமடைந்தார்கள். யௌவனர் நடு வயதையும் நடு வயதுடையோர் முதுமையின் ஆரம்பத்தையும் அடைந்தார்கள். எத்தனையோ செல்வவந்தர் தரித்திரராஞர்கள். எத்தனையோ தரித்திரர் செல்வவந்தராஞர்கள். சதா மாறுதலை யடைந்துகொண்டே யிருக்கும் உலகத்தின் இயற்கையாகிய சிற் சக்தி தன் தொழிலை நடத்திக் கொண்டே யிருக்கிறது.

ஒருநாள் மாலை ஐந்து மணியிருக்கும். இங்கித நாட்டின் தலை நகரமாகிய இந்திரபுரியின் இராஜாங்க உத்தியோக சாலையிலிருந்து அங்கு தொழில் செய்யும் இலிகிதர்களனைவரும் வெளியில் வந்து அவரவர் மனைக்கேகுமுன் தத்தமது நண்பர்களுக்கு வந்தனமளித்து விடைபெற்றுப் பிறிந்து அவரவர்கள் வீடுகளிருக்கும் திக்குகளை நோக்கிச் செல்கிருர்கள். இவர்களனைவரும் ஏறக்குறைய யௌவன வயதுடைய வாலிபர்களே யாகும்.

இவர்களில் ஒரு வாலிபனைப்பற்றியே நாம் கவனிக்க வேண்டும். அவனுக்கு வயது பத்தொன்பதிருக்கும். நடுத்தரமான உயரமும் கருமையான சிகையும் அகன்று அறிவின் பிரகாசம் சொலிக்கும் நெற்றியும், பரந்த கண்களின்மேல் கரியவேப்பிலையை யொத்த புருவங்களும், வரிசையாக அமைந்துள்ள முத்தன்ன பற்களும், அகன்ற செவியும், கூர்மையான சாந்த பார்வையுமுடையவன்.

அவன் புயங்கள் பருத்துக் கட்டுவிட்டு, கரங்கள் நீண்டிருந்தன. அவன் மார்பு அகன்று அழகோடு விளங்கியது.

அவன் நாணயமான உடையணிந்திருந்தாலும், எள்ளளவு பெருமையாவது, டம்பாகாரமாவது அவனிடமில்லை. அவன் முகம் நல்ல பெருந்தன்மையையும் நேர்மையான நடக்கையையும் விளக்கியது. யாவரிடத்தும் மரியாதையும் இன் சொல்லும் உபசாரமும் உடையவன். எள்ளளவேனும் அகங்கார முடையவனல்ல. அவன் பார்வையில் சாந்தமும் கருணையும் விளங்கின. அவன் வீட்டிற்குச் சரியான குறித்த வேளைக்குச் செல்ல எவ்வளவு துரிதமாக நடக்கவேண்டுமோ அவ்வாறு தன் நடையை யொழுங்குபடுத்திக் கொள்வதற்காக அடிக்கடி தன் ஜேபியிலிருக்கும் சிறு கை கடிகாரத்தை யெடுத்து மணி பார்த்துக்கொண்டே சென்றான்.

அவ்வாலிபன் பிரதானமான நகர வீதிகளையும் கடை வீதிகளையும் கடந்து பிறகு தோட்டங்கள் நிறைந்துள்ள ஒரு பிரதேசத்தில் நுழைந்தான். அத்திக்கில் இன்னும் கொஞ்சம் தூரத்தில்தான் அவனுடைய வாசஸ்தலம் இருக்கிறது. அவன் அவ் வழியாய்ச் சென்றுகொண்டிருக்கையில், திடீலென்று அவன் முகத்தில் சந்தோஷம் உண்டாயிற்று. ஏனென்றால் அவனுக்கு முன் சற்று தூரத்தில் இரண்டு கன்னிகைகள் சென்றுகொண்டிருந்தார்கள். அவர்களுடைய பின் பக்கந்தான் அவனுக்குத் தெரிந்தது. இருவரும் விலை யுயர்ந்தவை யல்லாவிடினும் சுத்தமும் நாணயமுமான உடைகளே யணிந்துகொண்டிருந்தார்கள்.

தேவராஜு என்ற பெயருடைய அவ் வாலிபன் அவர்களை முன்னமே யறிவான். ஆனால் அவன் அவர்களைப் பார்த்திருக்கிறானே யொழிய அவர்களிடம் பேசி

யறிமுகமில்லை. அவன் சற்றுநேரம் அவர்கள் பின்னு லேயே சென்றுகொண் டிருந்தான். அவர்கள் இருவரில் ஒருத்தியைப் பற்றியே அவன் மனதில் ஒருவிதச் சந் தோஷமான உணர்ச்சி யுண்டாயிற்று. அவன் மட்டும் அவர்களோடு பேசும் பழக்கமுடையவனுயிருந்தால் மிக்க சந்தோஷத்தோடு போய் அவர்களிடம் கலந்து பேசிக் கொண் டிருப்பான்.

இரண்டு கன்னிகைகளும் ஏறக்குறைய ஒரே உயர முடையவர்களா யிருந்தார்கள். அவர்கள் நமது கதா நாயகிகளாகிய ஞானம்பாளும், செல்வாம் பாளுமே. அவர்கள் சற்று தூரம் சென்றபோது, ஒரு திருப்பத்தில் திரும்ப நேர்ந்தது. அப்போது நாம் இந்த வழி செல்ல லாமா? திரும்பி வீட்டிற்குச் செல்லலாமா வென்று சிந் தித்துக்கொண்டே திரும்பிப் பார்த்தார்கள். தேவராஜ அவர்கள் தன்னைப் பார்த்துவிட்டதை யறிந்ததே இனி நாம் பின்னுல் செல்வது ஒழுங்கல்லவென்று சாதாரண மாய் நடந்து அவர்களைக் கடந்து சென்றுன். ஆனுல் திரும்பிப் பார்த்துக்கொண்டே மெதுவாகச் சென்றுன்.

செல்வாம்பாள் தன் சகோதரியை நோக்கி, " ஆ ! இவ் வாலிபர் நமது வீட்டிற்கருகிலுள்ள "புதுமனை" என்ற வீட்டில் கொஞ்சகாலமாக வந்து வசிக்கிறவர். இவ ரும் இவர் தாயாரும் அங்கு வசிக்கிருர்கள். இவர் தினந் தோறும் சரியாக ஒன்பது மணிக்குமேல் வேலைக்குச் செல்கிருர். மாலை சுமார் ஐந்து மணிக்கு வீட்டிற்கு வரு கிருர். இவர் யார்? என்ன வேலையோ தெரியவில்லை. அது எப்படியாயினும் இவர் நல்ல அழகிய உருவமுடைய வர்" என்ருள்.

ஞானம்பாள் " சகோதரியே ! நமக்கு அறிமுக

மல்லாத ஒரு மனிதரைப்பற்றி நாம் இவ்வாறு கவனிப்பது தகுதியல்ல" என்றாள்.

செல்வாம்பாள் "அய்யோ கடவுளே! என்று மிக்க பயத்தோடு தன் சகோதரியின் தோளைப்பற்றித் தாங்கள் திரும்பக் கருதிய பாதையினின்று அப்புறம் இழுத்துக் கொண்டாள். அவள் பயத்தோடு அப்படிச் செய்ததற்குக் காரணம் அவ்வழியில் ஒரு ஆள் குதிரைமேல் வந்து கொண் டிருந்தான். அக்குதிரை யவனுக்கடங்காமல் எகிறிக்குதித்து வேகமாக ஓடிக்கொண்டு வந்தது.

அக்குதிரையின் மேல் ஏறிவருபவன் மிக்க கம்பீரமான தோற்றமும் நாணயமான உடையணிந்தவனுமாக விருந்தான். அவன் குதிரைச் சவாரி செய்வதில் தேர்ந்தவனாயினும் அச்சமயம் அக்குதிரை அவன் கைக்கு அடங்காமல் முன்னும் பின்னும் பாய்ந்து ஏறியிருப்பவனைக் கீழேதள்ள முயன்று, கடைசியில் அவன் கைக்கடங்காமல் பாய்ந்து இக்கன்னிகைகள் பயந்து திரும்பிய பாதையே யோடத் தொடங்கியது. ஆச்சு, இன்னும் சற்று நேரத்திற்குள் அவர்களிருவர்க்கும் பிராணபத்தாக முடியும். அச்சமயம் நமது தேவராஜு தன் உயிருக்குத் துணிந்து பாய்ந்து போய் இடையில் புகுந்து அக்குதிரையின் கடிவாளத்தை யிருபுறங்களிலும் கெட்டியாகப் பற்றிக்கொண்டு அதை நகர வொட்டாது நிறுத்தி விட்டான். குதிரைமேல் ஏறி வந்தவன் திரவியநாதம் பிரபுவின் புதல்வனாகிய கனம் அச்சுதன் என்பவன்.

அச்சுதனுடைய ஆள் பின்னால் வந்துகொண் டிருந்தவன் துரிதமாக ஓடி அருகில் வந்தான். குதிரைமேலிருந்தவன் கீழிறங்கி ஒருவிதப் பெருமையோடும் டம்பத்தோடும் "அடே, இதை மாளிகைக்குக் கொண்டுபோ" என்று கூறிவிட்டு, அக்கன்னிகைகளை நோக்கி "என்குதி

ரையால் உங்களுக்கு இத்தகைய பயம் நேரிட்டதற்காக நான் மிக்க விசனிக்கிறேன். எப்போதும் என்னால் இப்படி நடந்ததில்லை'' என்று கூறினான்.

தேவராஜு அவர்களுக்குத் தைரியங் கூறினான். ஞானம்பாள் இரண்டொரு நிமிடங்களில் தைரிய மடைந்து சாந்தமாய் நின்று அச்சுதனுக்குத் தக்க மொழிகளால் அவன் மேல் குற்றமில்லையெனக் கூறி தேவராஜுக்கு மரியாதையோடு வந்தன மளித்தாள். செல்வாம்பாள் சீக்கிரத்தில் தேறுதலடையாமல் பீதிகொண்டவளாக நடந்து கொண்டாள்.

அச்சுதன் பன்முறை மன்னிப்புக் கேட்டுக்கொண்டு "நீங்கள் பயந்தெளிந்து சுகமாக விருக்கிறீர்களா என்பதையறிவதற்காக நாளை யுங்கள் வாசஸ்தலத்திற்கு வந்து விசாரிப்பதற்கு எனக்கு அனுமதி யளிக்கக் கோருகிறேன்'' என்றான்.

ஞானம்பாள் மரியாதையோடு, ஆனால் தாங்கள் வரவேண்டாம் என்று தான் கருதுவதாக அவனறியும் வண்ணம்,

"மிக்க வந்தனம், ஆனால் தாங்கள் அவ்வளவு சிரமமெடுத்துக் கொள்வது அனாவசியமே. நாங்கள் முன்னமே பயம் நீங்கிப் பழையபடி சுகநிலை யடைந்து விட்டோம்'' என்றாள்.

அச்சுதன் :—ஆயினும் தங்களைப்போல் தங்கள் கூட்டாளி அவ்வளவு தைரியமுடைய கன்னிகையாகப் புலப்படவில்லை. என் பெயர் கனம். அச்சுதம் பிள்ளை என்னால் உங்களுக்கு இப்பீதி யுண்டானதால் நீங்கள் சுகமாகவே யிருக்கிறீர்களென்று நான் அறிய விரும்புவதைத் தடுக்க மாட்டீர்களென்று கருதுகிறேன்'' என்றான்.

செல்வாம்பாள்:—"அது அனுவசியமே. ஆயினும் தாங்கள் பிடிவாதமாகக் கூறுகிற வரையில் நாங்கள் தடை செய்வது மரியாதைத் தாழ்வாய்த் தோன்றும். நாங்கள் இத் தோட்டத்தில் வடகோடியி லிருக்கும் சுகவிலாசம் என்ற வீட்டில் வசிக்கிறோம்" என்றாள்.

இதைக் கேட்டதே ஞானம்பாளுக்கு வெறுப்பும் கோபமும் உண்டாயின. ஆயினும் உடனே யவற்றை மறைத்துக் கொண்டாள். அச்சுதன் கன்னிகைகளுக்கும், தேவராஜனுக்கும் வந்தன மளித்துவிட்டுச் சென்றான்.

அச்சுதன் தன் பெயரைக் கூறியதைக் கேட்டதும் தேவராஜன் திடுக்கிட்டு அவனை நன்றாய்க் கவனித்தான். அவன் அக்கன்னிகைகளைக் காண வருவதாய்க் கூறிய தைக் கேட்டதும் அவன் முகத்தில் ஒருவித வெறுப்பான குறிதோன்றியது. ஆயினும் அதை மறைத்துக்கொண்டு அவன் சென்றதும் அக்கன்னியர்களை அவர்கள் வீட்டு வரைக் கொண்டு போய் விடலாமா என வெண்ணினான். ஆனால் ஞானம்பாளுக்கு அது பிரியப்படாதென்று அவ னுக்குக் குறிப்பாகப் புலப்பட்டதால் அவ்வாறு செய்யா மல் நாளைக்குச் சென்று இவர்கள் க்ஷேமத்தைப்பற்றி மட்டும் விசாரிப்போம் என்றெண்ணிக் கொண்டான். ஆனால் அச்சமயம் அதையும் அவர்களிடம் கூறவில்லை. ஞானம்பாளை மட்டும் நோக்கி,

"ஞானம்பாள்! நான் உங்கள் வீட்டிற்கு அருகாமை யிலேயே வசிப்பவன். என் பெயர் தேவராஜனப் பிள்ளை. நான் வசிப்பது 'புதுமனை' என்ற வீட்டில். நீங்கள் சுகமாய் வீடுபோய்ச் சேருவீர்களென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன்" என்று கூறி விட்டுத் துரிதமாகத் தன் வீட்டை நோக்கிச் சென்றான்.

அவன் சென்றதே செல்வாம்பாள் "ஆ! நம்மை

யறிந்தவரே! என்ன வேலை செய்பவரோ தெரியவில்லை. ஆனால் நம்மைக் காணவருவதாக ஒன்றும் கூறவேயில்லையே!'' என்றாள்.

ஞானம்பாள் :—''சகோதரியே! நீ அந்த அச்சுதம் பிள்ளையை வீட்டிற்கு வரும்படி ஒப்புக்கொண்டதற்காக மிக்க விசனிக்கிறேன். ஆயினும் கடைசியில் இது மரியாதைக்கு மரியாதை தானே என்றாள்.

செல்வாம்பாள் :—''ஆ! என்ன நாணயமும் கெம்பீரமுமான பார்வையுடைய வாலிபன். அதிலும் 'கனம்,' அவன் ஒரு பிரபுவின் புத்திரனாக இருக்க வேண்டும். எந்தப் பிரபுவின் புத்திரனோ? நம்மிடம் ஒரு புத்தகம் இருக்கிறது. அதைப் பார்த்தால் எல்லாம் தெரியும்'' என்றாள்.

ஞானம்பாள்:—''அதை யறிந்து கொள்ளவேண்டிய அக்கரை யொன்றுமில்லை. நாளைக்கு அவன் அவசியம் நம்மைக் காணவருவான். நீ எந்த விதத்திலும் அவன் மறுபடி வரும்படி இடங்கொடாதே.

செல்வாம்பாள் கொஞ்சம் கோபத்தோடு ''நான் ஒருபோதும் முட்டாள் தனமாகவாவது கௌரவத்தாழ்வாகவாவது நடந்து கொள்ளவே மாட்டேன். ஆயினும் நாம் எப்போதும் இம்மாதிரி சன்னியாசிகளைப் போல் ஒருவரையும் காணாமல், எங்கோ இரண்டொரு குடும்பங்களையும் அந்த மூதேவிகளான தம்புசாமி பிள்ளை குடும்பத்தையும் மட்டும் அறிமுகமாக்கிக்கொண் டிருப்பதாயின்......'' என்றதே.

ஞானம்பாள் :—''சகோதரியே! தம்புசாமிப் பிள்ளை நமது பாட்டனாரின் அந்தரங்க லிகிதனாக விருந்தவர் என்பதை மறந்து பேசாதே. அவரும் அவர் மனைவியும் எப்போதும் நம்மிடம் அன்பாகவே

நடந்து கொள்வதை நீ கவனிக்க வில்லையா? தம்பு சாமிப் பிள்ளை தன் முயற்சியால் ஏழையான இலிகிதர் நிலைமையி லிருந்து ஒரு இலாயர் பதவியை யடைந்தார்'' என்றாள்.

செல்வாம்பாள் :—''ஆயினும் ஒரு நியாயசபையில் அவன் பார்வையைக் கண்டதே எவரும் அவன் குற்றம் செய்தவன் என்று கூறுவார்கள். என் தாயார் அவனைப் பற்றி நல்ல அபிப்பிராயம் கொண்டிருக்க வில்லை.

ஞானம்பாள் :—நீ எதனால் அப்படி அபிப்பிராயப் படுகிறாய்?

செல்வாம்பாள் :—ஏன்? நடந்த விவகாரங்களால் அது நன்றாய் விளங்குகிறது. தாயார் இறந்துபோன போது அவனை யேன் நமக்குப் பாதுகாவலனாக ஏற்படுத்தவில்லை?

ஞான :—அந்தோ! நான் என் தாயைப்போலவே கருதியிருந்த என் பெரியதாய் திடீரென்று இறந்து போனார்கள். அந்தம்மாள் இறந்துபோகும் போது எந்த ஏற்பாடு செய்யவும் அவகாசமில்லை.

செல்வா :—என் தாயாரின் மரணத்திற்காக நான் எவ்வளவோ துயருறுவதாயினும், நமக்கு மேல் காவலாக ஒருவரை நியமிக்காமற் போனதற்காக நான் சந்தோஷமே யடைகிறேன். ஒருவருடைய கடுமையான அதிகாரத்திற் கடங்கிக் கஷ்டப்படாமல் இப்போது நமக்கு நாமே எஜமானிகளாக விருக்கிறோம். நமக்குப் போதுமான வருமானம் வருகிறது. நல்ல சுகமான வீடிருக்கிறது.

ஞான :—அப்படி யிருந்தும் சற்று முன்புதான் நாம்

சன்னியாசிகள்போ லிருக்கிறோ மென்று நமது நிலைமையைப்பற்றி வெறுப்பாகக் கூறினையே.

செல்வா :—அதற்கல்ல, அப்போதைக்கப்போது இரண்டொரு சினேகிதாள் நம்மிடம் வரவும் போகவுமாக இருந்தால் நன்றாக விருக்கும். கிடக்கட்டும், நமக்குள் சச்சரவு வேண்டாம். எனது தாயார் இறந்து இரண்டரை வருடங்களாயிற்று. இதுகாறும் ஒருபோதுகூட நாம் இப்படித் தீக்ஷணியமாக வார்த்தையாடியதில்லை.

ஞானு :—"கடவுளே! நமக்குள் ஒருபோதும் சச்சரவு வேண்டாம். இச் சம்பாஷணையை யித்தோடு நிறுத்தி விடுவோம். இதோ வீட்டருகில் வந்து விட்டோம்." என்றாள்.

அச்சமயம் இருவரும் அழகிய தங்கள் வீட்டின் மதில் சுவரிலுள்ள வாயிற்படியை நெருங்கினார்கள். உடனே இவர்கள் வரவை யெதிர்பார்த்துக்கொண்டிருந்த ஒரு மூதாட்டியால் அங்குள்ள இரும்புக் கதவுகள் திறக்கப்பட்டன. இருவரும் உடனே உள்ளே சென்றார்கள். அம்மூதாட்டி நெடு நாட்களாக, இவர்கள் குழந்தைப் பருவத்திலிருந்து, வீட்டிலிருப்பவ ளாதலால் இவர்கள் மேல் தாய் போன்ற உண்மை யன்புள்ளவள்.

அந்த வீடு ஒரு அடுக்கு மாடிவீடு. சாதாரணமாய் உட்கார்ந்திருக்கும் அறையும், போசன அறையும், சிற்றுண்டி யருந்தும் அறையும் கீழேயே யிருந்தன. அவ்வீட்டைச் சேர்ந்த ஒரு அழகிய பெரிய தோட்டமுண்டு. அதில் ஆங்காங்கு அழகிய சிலைகள் வைக்கப்பட் டிருந்தன. சகோதரிக ளிருவரும் வீட்டிற்குள் சென்றதும் உலவச் சென்றபோது அணிந்திருந்த உடையைக் களைந்து விட்டு வேறுடை யணிந்து, மேல் மாடியில் தாங்கள்

வழக்கமாய் உட்காரும் ஒரு விசாலமான அறைக்குச் சென்று உட்கார்ந்தார்கள். அந்த அறையின் சாளரங்கள் வீட்டின் பின் பக்கம் தோட்டத்திலுள்ள ஒரு விசால மான முற்றத்தைப் பார்த்தது போல் இருந்தது. இரு வரும் அங்கு உட்கார்ந்ததும் செல்வாம்பாள் மிக்க ஆயாச மடைந்தவள் போல் ஒரு சாய்ப்பு நாற்காலியில் சாய்ந்து கொண்டு ஒரு சிறு நாய்க்குட்டியோடு கொஞ் சிக் கொண்டிருக்கத் தொடங்கினள். ஞானம்பாளோ உட்கார்ந்ததும் காலுக்கணியும் மேஜோடுகள் பின்னும் தொழிலைச் செய்யத் தொடங்கினள். இக்கதையை வாசிக் கும் சகோதரசகோதரிகள். இந்த இரண்டு சகோதரிகளின் நடவடிக்கை, வழக்கங்கள், குணங்கள், நோக்கங்கள் முதலியவைகளை ஆரம்பத்திலிருந்தே கவனிக்கக் கோரு கிறோம். சகோதரிகளை அவர்கள் வீட்டில் விட்டுவிட்டு நமது கதையில் பிரதான புருடனை தேவராஜனைக் கவ னிப்போம்.

---

## 7-வது அத்தியாயம்.

### சகோதரிகளுக்குத் தக்க எச்சரிக்கை.

சகோதரிகளை விட்டுப் பிரிந்த தேவராஜன் தன் வீட் டிற்குச் சென்றபோது சந்தோஷமனதோடு சென் றான். ஏனெனில், உண்மையில் அவர்கள் அத்தகைய ஆபத்தில் சிக்கிக் கொண்டதைப்பற்றி அவனுக்கு வியா குலமே. ஆயினும் அத்தகைய சம்பவம் நேர்ந்தது ஒரு பக்கம் அவனுக்குச் சந்தோஷமே. ஏனெனில் அவன் அந்தப் பிரதேசத்தில் வசிக்கவந்த நான்கைந்து மாதங் களாக அவன் அவர்களைப் பார்த்துக்கொண்டே யிருந்த தோடு அவர்கள் மேல் அவனுக்குப் பிரிய முண்டாயிருந்

தது. அதிலும் இருவர் மேலும் ஒரு விதமான பிரிய மாகவில்லை. ஞானம்பாள் மேல் அவனுக்கிருந்த பிரியம் அடிக்கடி அவள் நினைப்பை யுண்டாக்கிக் கொண்டே யிருந்தது. அவன் தாயாரும் அவர்களைப் பன்முறை பார்த்து அவர்களைப் பற்றி இரக்கத்தோடு இவனிடம் பேசுவதுண்டு. இவ்வாற்றால் அவர்களோடு எப்போது சம்பாஷிக்கச் சமயம் வாய்க்குமோ வென்று அவன் மிக்க ஆவல்கொண் டிருந்ததால், இச்சந்தர்ப்பம் நேரவே மிக்க சந்தோஷமடைந்து என்று மில்லாத உற்சாகத் தோடு வீட்டிற்குள் நுழைந்தான்.

தேவராஜன் தன் வரவை ஆவலோடு எதிர்பார்த்துக் கொண்டிருக்கும் தன் தாயாரைக் கண்டதும், "அம்மா! என்ன பயங்கரமான ஆபத்து. எனக்கல்ல நீ பயப்பட வேண்டாம். நான் சற்று நேரங்கழித்து வந்தது அதனாற் றான்" என்றான்.

தாயார்:—நீ தக்ககாரணமின்றி அப்படி வரமாட்டா யென்று எனக்குத் தெரியும்.

தேவராஜன்:—"பாரம்மா! இரண்டு கன்னிகைகள் பாதை யில் வந்துகொண் டிருந்தார்கள். ஒரு வாலிபன் ஏறி வந்த குதிரை மிரண்டு அவன் கைக்கு அடங்கா மல் எகிறிக் குதித்தோடியது. அக்கன்னிகைகளிரு வரும் பிராணாபத்தில் சிக்கிக்கொள்ள விருந்தார் கள். நான் துணிகரமாக நுழைந்து குதிரையைப் பிடித்துக்கொண்டு அவர்களைக் காப்பாற்றினேன். அக்கன்னிகைகள் யாரென்று நினைக்கிறாய். நம் வீட்டிற்கருகாமையில் வசிக்கிறார்களே இரண்டு கன் னிகைகள், நீ கூட அவர்களைப்பற்றி அப்போதைக் கப்போது கூறுவாயே, ஞானம்பாள், செல்வாம் பாள் என்பவர்கள் அவர்களே" என்றான்.

அதைக் கேட்டபோது அம்மாது சற்று திடுக்கிட்டாள். தேவராஜன் அதைக் கவனிக்காமல் அதற்குள் "அம்மா! அவ்வாலிபன் யாரென்று கருதுகிறாய். கனம் அச்சுதம்பிள்ளை, எனக்கு உத்தியோகத்திற்குச் சிபாரிசு செய்தாரே திரவியநாதம்பிரபு, அவர் புத்திரன்" என்றான்.

அதைக்கேட்டதே அம்மாதின் முகத்தில் விசேட மாறுதல் உண்டாயிற்று. அம்மாது அதை மறைக்கச் சாடையாய்த் தன் கைக்குட்டையைக் கீழே நழுவவிட்டு அதை யெடுப்பவள்போல் குனிந்து நிமிர்ந்தாள். அதையும் தேவராஜன் கவனிக்கவில்லை. "ஆம் அவன்றான். அவன் அக்கன்னிகைகளுக்குத் தன் பெயரைக் கூறினான். அவர்களை நாளை வந்து காண்பதாகக் கூறினான். நானும் போய்க் காணவேண்டுமென்றிருக்கிறேன்" என்றான்.

அச்சமயம் ஒரு வேலைக்காரி வந்து ஆகாரம் வட்டிக்கப்படுகிறது என்றதே இருவரும் எழுந்து போஜன அறைக்குச் சென்றார்கள். இவர்கள் வீடும் ஓர் அழகிய வீடே; ஆனால் சுக விலாசத்திலிருப்பதைப்போல் பெரிய தோட்ட மங்கில்லை. வீட்டின் முன் பக்கமட்டும் சில சிறு செடிகளிருக்கின்றன. இவர்கள் அங்கு வந்து நான் கைந்து மாதங்களே யானபடியால் இன்னும் அச்சிறு தோட்டமும் அழகுபெறச் செய்யப்படவில்லை.

இருவரும் போசனம் செய்து முடிந்தபின் தாயார் தேவராஜை நோக்கி, ஆ மகனே திரவியநாதம் பிரபுவின் குடும்பத்தைப்பற்றி எனக்குக் கொஞ்சம் தெரியும். ஆதலால் அவர் புத்திரன் அதிகமான குலப் பெருமையும் அகங்காரமுமுடையவன் என்று அறிவேன். ஆகையால் அங்கு அவனைச் சந்தித்துகொண்டே அவனிடம் அறிமுகம் கொள்ள நினையாதே" என்றாள்.

தேவராஜன்:—அப்படியே யாகட்டுமம்மா. தங்கள் பிரி

யத்திற்கு மாருக ஒருபோதும் நடவேன். அவனைக் கண்டால் வந்தனத்திற்குப் பதில் வந்தனமளித்து விட்டுச் சாடையாய்ப் போய்விடுவேன்.

தாயார்:—" ஏனப்பா நீ அக்கன்னிகைகளைக் காணவேண்டியது அவசியமென்று கருதுகிருயோ?" என்றதே தேவராஜ ஒருவித நாணமடைந்து மறுபடி சமாளித்துக்கொண்டு,

" அப்படியில்லை. நான் அவர்களை யாபத்தினின்று காப்பாற்றியபடியால் இப்போது சுகமாக விருக்கிருர்களாவென்று மரியாதைக்காக காணவேண்டுமென்பதேயன்றி வேறில்லை. ஏனம்மா? அவர்களைக் காண்பதில் ஒன்றும் குற்றமில்லையே!" என்ருன்.

தாயார்:—இல்லையில்லை. குற்றமொன்றுமேயில்லை. அக்கன்னிகைகள் மிக்க ஒழுங்காக நடந்துகொள்கிறவர்கள். அவர்கள் நடக்கையில் எள்ளளவு பழுதும் கூற விடமில்லை. ஆ! அவர்கள் அவ்வாறே நிலையாக இருக்கவேண்டுமென்று கடவுளைப் பிரார்த்திக்கிறேன்.

தேவராஜ:—ஏனம்மா? அவர்கள் தங்கள் நேர்மையான நடக்கையினின்றும் தவரிவிடுவார்களென்று கருதுகிருயா?

தாயார்:—ஆ! நீ தவருக அர்த்தம் செய்துகொள்ளாதே. நான் கூறியது, அவர்கள் நடக்கையில் தவரி விடுவார்களென்றல்ல. இவ்வுலகில் எவ்வளவோ சூதுவாதுகளும் படுமோசங்களுமிருக்கின்றன. கபடமற்ற பெண்களை ஆசை காட்டி மயக்கிவிட்டுப் பின்னுல் அனுதைகளாக விட்டுவிடும் அயோக்கியர்கள் எவ்வளவோ யிருக்கிருர்கள். இக் கன்னிகைகளுக்கு அத்தகைய மோசமான வலைகளினின்றும் தப்பப்

போதுமான உலக அனுபவமில்லை. ஆகையால் இந்த வயதில் அவர்கள் தக்க பாதுகாப்பின்றித் தங்களைத் தாங்களே காத்துக்கொள்ளும்படி விட்டிருக்கப்படலாகாது என்பதே யென் கருத்து.

தேவராஜன்:—“ ஆ! அம்மா அப்படியிருந்தால் நீ அவர்களிடம் சினேகமாகிப் போகவரவிருந்து அவர்களுக்குப் பாது காவலாயிருக்கலாகாதா ?” என்றான்.

இம் மொழிகளைக்கேட்டதே அம்மாதின் மனதில் ஒரு முள் குத்தியதுபோ லிருந்தது. அவள் “ ஆ! நாணு! மகனே! ஜன சமூகத்தில் போகவர எனக்குப் பிரியமில்லையென்று நான் பன்முறை கூறியிருக்கிறேனே. அதனால்தான் நான் எங்கும் செல்வதுமில்லை. நமது வீட்டிற்கு ஒரு வரையும் வரவழைப்பதுமில்லை. என் தேக நிலைமை அத்தகைய விஷயங்களுக்குச் சற்றும் பிரியமளிக்கவில்லை. நீ வயது வந்து மணம் புரிந்துகொண்டு குடும்பஸ்தனாகு முன் என்னிடமிருக்கிற வரையில் உனக்குச் சன்னியாசியோடு வாசம் செய்வதுபோல் வெறுப்பாகவே தோன்றுமென்று கூறியிருக்கிறேனல்லவா!” என்றாள்.

தேவராஜன்:—அம்மா! அப்படியில்லை, உன்னோடுகூட வசிப்பதே எனக்கு எல்லா கேளிக்கைகளையும் அனுபவிப்பதாகும். இப்படி நூறு ஞானம்பாள் செல்வாம்பாள்களைக் காண்பதாயினும், உன்னோடு வசிக்கும் இன்பத்தை யிழப்பதாயின் எனக்கு அவர்கள் ஒரு துரும்புக்குச் சமானமே. உனக்குப் பிரியமில்லையென்னில் இப்போதும் நான் அவர்களைக் காணக்கூட செல்லேன்” என்று சற்று ஆத்திரத்தோடு கூறினான்.

தாயார்:—குழந்தாய்! நீ என் விருப்பத்திற்கு மாறாக ஒரு

போதும் நடக்கமாட்டாயென்று நான் அறிவேன். நீ உன் உத்தியோகத்திலிருந்து கொஞ்சகாலம் விடுமுறை பெற்றுக்கொண்டு அவர்களைப் போய் பார்த்து வா. ஆனால் சம்பாஷணையில் அவர்கள் என்னைக்காண வேண்டுமென்ற விருப்பத்தை வெளியிடுவார்களாயின், மிக்க பக்குவமாகவே "என் தாயாரின் தேகஸ்திதி மிக்க மெலிவடைந்த நிலைமையிலிருப்பதால் ஒருவரையும் வரவேற்கவாவது ஒருவிடத்திற்குச் செல்லவாவது கூடிய நிலைமையிலில்லை" என்று கூறிவிடு. அவர்கள் என்னைக் காண வரும்படி இடங் கொடாதே" என்றான்.

"தேவராஜன் தடையின்றித் தங்கள் பிரியப்படி நடந்துகொள்ள மறக்கமாட்டேன்" என்றான்.

தேவராஜின் தாய்க்கு வயது முப்பத்தேழாகிறது. ஆனால் பார்வைக்கு நான்கைந்து வருடங்கள் அதிகமானவளாகவே தோன்றும். அம்மாது வியாதியுடையவள் போல் மெலிவடைந்தவளாகக் காணப்பட்டாள். வெளியார் யார் அம்மாதைக் கவனித்தாலும், அவளுக்குள் இருக்கும் ஒழிக்கமுடியாத ஒருநிலையான மனோவியாதியே யம்மாதின் மனச்சோர்வுற்ற நிலைமைக்குக் காரணமென்று எளிதிலுணர்ந்து கொள்ளலாம். தேவராஜன் எந்நேரமும் கூடவே யிருந்து பார்த்துக்கொண் டிருப்பவனாதலால் அவனுக்குத் தன் தாயார் விஷயத்தில் ஒரு வித்தியாசமும் தோன்றவில்லை.

மறுநாள் பகல் சுமார் பனிரண்டரை மணி யிருக்கும். அப்போது நமது ஞானம்பாளும் செல்வாம்பாளும் தங்கள் வீட்டில் மேல்மாடியிலுள்ள விசாலமான அறையில் உட்கார்ந்துகொண் டிருந்தார்கள். செல்வாம்பாள் ஒரு

காதல் விஷயமான நாவலை வாசித்துக்கொண் டிருந்தாள். ஞானம்பாள் தையல்வேலை செய்துகொண் டிருந்தாள்.

இச்சந்தர்ப்பத்தில் இச்சகோதரிகளின் குணம் நடக்கைகளிலுள்ள தாரதம்மியத்தைக் கொஞ்சம் குறிப்பிட்டுவிட்டு கதையைத் தொடர்ந்து செல்வாம். இருவரும் நல்ல அழகுடையவர்களே. ஆனல் ஞானம்பாள் தான் அழகுடையவள் என்பதைக் கவனிக்காதவள். செல்வாம்பாள் அதைக் கவனித்து அதனல் பெருமையை யுணர்பவள். இருவரும் நாணயமான உடையே யணிபவர்கள். ஞானம்பாள் மிக்க அடக்கத்தோடு, விலையையும் கண்ணைக் கவரும் வண்ணமானதா யிருக்கவேண்டும் என்பதையும் கவனியாமல், சுத்தத்தையும் நாணயத்தையு மட்டும் கவனித்து உடைகளை யுடுப்பவள். நல்ல யோக்கியதையுடையவளே. கெட்ட நடக்கை, துர்க்குண முடையவளல்ல. சாந்தம், பெருமையின்மை, டம்பமின்மை முதலிய குணங்களை யுடையவள். செல்வாம்பாளோ யோக்கியதை நடக்கை யிவற்றில் தவறில்லாதவளே. ஆனல் பார்ப்பவர்கள் கண்களைக் கவரும் வண்ணம் உடுத்துக் கொள்ளவேண்டும், கேளிக்கை, விருந்து முதலியவை நடக்குமிடங்களுக்குப் போய்ச் சந்தோஷமாய்க் காலத்தைக் கழிக்கவேண்டும் என்ற எண்ணமுடையவள். புதிதாய் ஆடவரைக் கண்டால் தாராளமாகவே விசுவாசத்தோடு பேசுபவள். ஞானம்பாள் ஆடவரிடம் மரியாதை காட்டினலும் நாணத்தோடு அவசியமான மட்டுமே பேசுபவள்.

செல்வாம்பாளும் ஞானம்பாளும் நாம் கூறியபடி அறையில் உட்கார்ந்துகொண் டிருக்கையில் செல்வாம்பாள் தான் வாசித்துக்கொண் டிருந்த நாவலைக் கீழே வைத்துவிட்டுச் சுமார் கால்மணி நேரமாக ஏதோ சிந்

தனையி லிருக்கிறாள். அப்போது மணி ஒன்றடித்தது. உடனே அவள் திடுக்கிட்டு "ஆ மணி ஒன்றாய்விட்டதே! நான் இன்னும் பனிரண்டடிக்கவில்லை யென்றல்லவோ எண்ணி யிருக்கிறேன்" என்றாள்.

ஞானம்பாள்:—"உன் நினைப்பு முழுமையும் நீ படிக்கும் நாவலில் அமிழ்ந்திருந்தது போலும்" என்றாள்.

செல்வாம்பாள்:—இல்லை. அதை எறிந்துவிட்டேன்; அக் கதாநாயகி எனக்குப் பிடிக்கவில்லை. அவள் காதல் கொண்டிருக்கும் வாலிபனை மணம்புரிய அவள் பெற்றோர் சம்மதிக்காதபோது, அவள் துணிகரமாக அவர்களைச் சட்டைசெய்யாமலே அவனை மணந்துகொள்ள வேண்டும் அல்லது பேசாமல் இருவரும் ஓடிப்போய் வெளியூரில் மணம் செய்து கொள்ளவேண்டும். அவள் இரண்டில் ஒன்று செய்யத் தைரியமின்றி விழித்துக்கொண் டிருக்கிறாள். அவள் காதலனாவது சற்று தைரியத்தோடு கூப்பிட்டிருந்தால் அவள் அவன்கூடப் போய்விட் டிருப்பாள். அவனும் கோழை. இருவரும் அப்படிப் போய்விட்டிருந்தால் ஆ! அப்புறம் அவர்களைத் தேடுவது, அவர்கள் மறைந்துகொண்டிருந்து மணம் புரிந்துகொள்வது யாவும் எவ்வளவோ உற்சாகமாக விருந்திருக்கும். ஆ! நான் மாத்திரம் இந்த நாவலை யெழுதியிருந்தால்..." என்றாள்.

செல்வாம்பாள் மனதில் மிக்க வியாகூலமுடையவளாய், "சகோதரியே! அம்மாதிரி அக்கதாநாயகி தன் பெற்றோரின் பிரியத்திற்குமாறாக நடக்கும்படி நீ கருதுவதைப் பற்றி நான் மிக்க விசனிக்கிறேன். இதனால் வாசிப்போர்க்கு நன்னடக்கையில் உற்சாகம் உண்டாகாதே" என்றாள்.

செல்வாம்பாள்:—" நன்னடக்கையோ எதுவோ அதைப் பற்றி நான் கருதவில்லை. நான் கூறுகிறபடி இக் கதை யெழுதப்பட் டிருந்தால் மிக்க உற்சாகமான கதையாக விருக்கும். நாவலைப் பற்றிய விஷயம் உனக்குத் தெரியாது. தேவாரம், திருப்புகழ், நந் தன் சரித்திரம், பெரிய புராணம் இந்த விஷயங் களைப்பற்றித் தான் உனக்குத் தெரியும். எனக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்தால்கூட அவற்றில் ஒரு வரி யைக்கூட நான் வாசிக்கமாட்டேன் " என்றாள்.

இச்சம்பாஷணையால் இருவர் குணங்களின் வித்தி யாசம் நன்கு விளங்கும். ஞானம்பாள் தன் சகோதரி யோடு சச்சரவு செய்யலாகாதென்று மனதில் எண்ணிக் கொண்டு அவள் அபிப்பிராயத்தைப்பற்றி மிக்க மன வியாகூலத்தோடு " ஆம். அவரவர்கள் அபிப்பிராயம் வெவ்வேறு விதமாக விருக்கிறது" என்று கூறிப் பேசாம லிருந்துவிட்டாள்.

செல்வாம்பாள் "ஆ! மணி யொன்றாய்விட்டது. நம்மைக் காண வருவார்கள். நாம் இன்னும் உடை யணிந்துகொள்ளாமலே யிருக்கிறோம்" என்றாள்.

ஞானம்பாள் :—என் நீ இப்போது அணிந்திருக்கும் உடையே போதுமான நாணயமான உடை.

செல்வாம்பாள்:—இல்லை யில்லை. நான் என்னுடையை மாற்றவேண்டும். நீ, இந்த மஸ்லின் உடையோ டிருப்பது தகவே தகாது.

ஞானம்பாள் :—நான் என் உடையை மாற்றவே மாட் டேன். இதுவே யெனக்குப் போதும்.

செல்வாம்பாள்:—"சே சே! நீ பார்ப்பவர்கள் மனதைக் கவரும் வண்ணம் உடுத்துக்கொள்ள வேண்டும்"

என்று கூறிக்கொண்டே அங்கிருந்து புறப்பட்டு உடுப்புகள் இருக்கும் கீழ் அறைக்குச் சென்றாள்.

செல்வாம்பாள் சென்றபின் ஞானம்பாள் தனியே யங்கிருந்தாள். இரண்டொரு நிமிடங்களுக்குள் அவர்களுடைய அன்பார்ந்த வேலைக்காரியாகிய இராஜாம்பாள், அங்கு வந்து ஞானம்பாளிடம் ஒரு கடிதம் கொடுத்தாள். அது உள்ளூரிலிருந்தே தபால் மூலமாக வந்தது. வேலைக்காரி அதை யளித்துவிட்டுச் சென்றதும் ஞானம்பாள் அக்கடிதத்தைப் பிரித்துப் பார்த்தபோது அவளடைந்த வியப்பிற் கோரளவேயில்லை. ஏனெனில் அக்கடிதத்தில் கீழ்க் கண்டபடி எழுதியிருந்தது :—

"சௌ. ஞானம்பாள் அம்மாளுக்கு இக்கடிதத்தை யெழுதுவது உங்களுடைய க்ஷேமத்தைக் கோரும் ஒரு ஆள். எனக்கு கனம் அச்சுதன்பிள்ளையைப்பற்றித் தெரியும். அவன் உங்கள் வீட்டிற்கு வர விருப்பதாகத் தெரிகிறது. அவன் அயோக்கிய நடக்கைகளில் முழுகி யிருப்பவன். எப்போதும் துர்க்கிருத்தியங்களிலும் சிற்றின்பத்திலும் காலத்தைப் போக்குபவன். அவன் உங்களுக்குத் தகுதியான சகவாசமல்ல. நான் ஒருவரை அவதூறு செய்யும் எண்ணங் கொண்டெழுதவில்லை. அக்குணமே யென்னிடமில்லை. உன்னுடைய நேர்மையான கௌரவ நடக்கையை நானறிந்திருப்பதால், நீ இவ்விஷயத்தில் எச்சரிக்கையா யிருக்கத் தவிரமாட்டாய் என்று நம்பியே யிதை யெழுதினேன். கடவுள் உங்களைப் பாதுகாப்பாராக. இப்படிக்கு உங்கள் நன்மையை விரும்பிய ஆள்."

இதை வாசித்துப் பார்த்ததே ஞானம்பாள் அச்சுதன் தங்கள் வீட்டிற்கு வரும்படியான சந்தர்ப்பம் நேர்ந்ததற்காக மிக்க வியாகூலப் பட்டாள். அவள், கையெழுத்தில்லாக் கடிதத்தை நம்பியொருவர் மேல் கெட்ட அபிப்

பிராயம் கொள்ளுங் குணமுடையவளல்லவாயினும் அக் கடிதம் எழுதியிருந்த மாதிரியால் அதில் கண்டவிஷயம் உண்மையாகவே யிருக்க வேண்டுமென்று அவள் மனதிற் குப் புலப்புட்டது. உடனே முன்னாள் அச்சுதன் பிள்ளை பேசியதிலும் அவன் நடையுடை பாவனைகளிலும் இக் கடிதத்திற்கு அத்தாட்சியான விஷயங்கள் இருந்தன வென்று தோன்றியது.

இக்கடிதத்தைச் செல்வாம்பாளுக்குக் காட்டலாமா வெனக் கருதினாள். அப்படிக் காட்டினால் அவள் அவனை யாரோ வேணுமென்றே அவதூறு கூறுவதாகக் கருதி அதற்காக வேணுமென்றே யவனிடம் இரக்கமும் அன்பும் காட்டிப் பேசி அவன் இங்கு மறுபடிவர இடங்கொடுத்து விடுவாள் என்று கருதி அதையுடனே கிழித்தெறிந்து விட்டாள்.

---

## 8-வது அத்தியாயம்.

### தாயினன்பும் தீநெரியின் பயனும்.

இரண்டொரு நிமிடங்களுக்குள் யாரோ தெருக் கதவைப் பலமாகத் தட்டும் சத்தம் கேட்டதும், ஞானம்பாள் நிதானமாகவே தன் தையல் சாமான்களை யெல்லாம் பெட்டியில் வைத்துவிட்டுக் கீழறங்கி யாரே னும் வந்தால் வரவேற்றுச் சம்பாஷிக்கும் அறைக்குச் சென்றாள்.

அறையில் கனம் அச்சுதன் பிள்ளையும் செல்வாம் பாளும் முன்னமே உட்கார்ந்து ஊர் சமாசாரங்களைப் பற்றியும் நாடகம் முதலிய விஷயங்களைப் பற்றியும் தாராளமாகப் பேசிக்கொண் டிருக்கிறார்கள். செல்வாம் பாள் கீழ் அறையிலிருந்த படியால் கதவு தட்டப்பட்

டதே தானே போய்க் கதவைத்திறந்து அவனை உபசாரத்தோடு வரவேற்றாள். அவள் பளபளப்பான உடையணிந்திருந்தாள்.

ஞானம்பாள் அங்கு சென்று அவர்களைக் கண்டதேயவள் மனதில் ஒருவித வெறுப்பும் கோபமுமுண்டாயின. ஆயினும் அவற்றை யடக்கிக்கொண்டு வந்திருக்கும் அச்சுதனுக்குச் சாதாரண மரியாதையோடு உபசாரம் கூறிவிட்டு உட்கார்ந்தாள். மறுநிமிடம் மறுபடி கதவு தட்டப்பட்டது. வேலைக்காரி போய்க் கதவைத் திறந்ததும் நமது தேவராஜு உள்ளே வந்தான். செல்வாம்பாள் அச்சுதன் பிள்ளையை யுபசரித்ததுபோலவே அவனையுபசரித்தாள். ஞானம்பாள், அவன் தங்களையாபத்தினின்றும் காப்பாற்றியவன் என்ற காரணத்தால், அச்சுதனையுபசரித்ததினும் நன்றியோடும் அன்போடும் தேவராஜை உபசரித்து நல்வரவு கூறினாள்.

அச்சுதன் அதைக் கவனித்தபோதிலும் கவனியாதவன்போ லிருந்ததோடு கன்னிகைகள் தேவராஜிடம் விசுவாசம் காட்டுகிறபடியால், அவர்களைப் பிரியப்படுத்த நாமும் அவ்வாறே நடந்துகொள்ள வேண்டும் என்று சிந்தித்து உண்மையாகவே விசுவாசங் காட்டுபவன் போல், தேவராஜு நடப்பதின்ன தென்று நிதானிப்பதற்குள், அவன் கரத்தைப் பற்றிக் குலுக்கி அவனைச் சந்தித்ததால் சந்தோஷங் கொண்டவன் போல் காட்டிக் கொண்டான்.

பிறகு அரைமணி நேரம் நால்வரும் பல விஷயங்களைப்பற்றிச் சம்பாஷித்துக்கொண் டிருந்தார்கள். சம்பாஷணை முழுமையிலும் ஞானம்பாள் அச்சுதன் மறுபடி அங்கு வருவது தனக்குப் பிரியமில்லையென்று குறிப்பாக விளங்கும்படிக்கே நடந்துகொண்டாள். தேவராஜு

தன் தாயின் பிரியத்திற்கு மாருக அச்சுதனிடம் சிநேக பாவம் காட்டி நடக்க நேர்ந்ததற்காக மனவருத்தமடைந் தான். ஆனல் திடீலென்று தடுக்கக்கூடாத விதமாக அத்தகைய சந்தர்ப்பம் வாய்ந்ததால் அது தன் குற்ற மல்லவென்று தேறுதலடைந்தான். ஆயினும் அங்கு சம்பாஷித்துக்கொண்டிருந்த அரைமணி நேரமும் அச் சுதனிடம் சிநேக பாவமுண்டாக்கிக் கொள்ளாதபடி தன்னுற் கூடியவரை சாக்கிரதையாகவே யிருந்தான். சம்பாஷணையில் தான் இராஜாங்க உத்தியோக சாலையில் ஒரு லிகிதன் என்பதை வெளியிட நேர்ந்தது. ஆனல் அவ்வேலை தனக்குக் கிடைக்கும்படி சிபாரிசு செய்தது அச்சுதன் தந்தையாகிய திரவியநாதம் பிரபுவென்று மட் டும் கூறவில்லை.

கடைசியில் இருவரும் கன்னிகைகளிடம் விடை பெற்று வெளியில் புறப்பட்டபின் அச்சுதன் தேவராஜி டம் பேசிக்கொண்டே வரக்கருதினன். ஆனல் தேவ ராஜு சட்டென்று அவனுக்கு வந்தனமளித்துவிட்டு, நான் போய் வருகிறேன் என்று கூறிக்கொண்டே தன் வீட்டை நோக்கித் துரிதமாய்ச் சென்றுன்.

தேவராஜு தன் தாயாரிடம் சென்றதும், தான் கன் னிகைகளைக் கண்டதும், அச்சுதனும் வந்ததும், அங்கு நடந்த சம்பாஷணைகளையும் ஒன்று விடாமல் நடந்தது நடந்தபடிக்கே கூறினன். அதனல் அவன் தாயார் அவ னேடுகூடவே சென்று அருகிலிருந்து யாவற்றையும் கண்டு கேட்டால் எப்படி எல்லா சங்கதியும் உணர் வாளோ அவ்வாறே புணர்ந்துகொண்டாள்.

தேவராஜு அன்று தன் தொழிலிலிருந்து பிற்பகல் முழுமையும் விடுமுறை பெற்றுக்கொண்டு வந்தபடியால் அவன் தன் வீடு சேர்ந்தபோது இராப்போசனம் செய்ய

இன்னும் அதிக நேரமிருந்தது. ஆகையால் இருவரும் சற்றுநேரம் தோட்டத்தில் உலவி வரப் புறப்பட்டார்கள்.

தாயார்:—குழந்தாய்! நீ அச்சுதனிடம் அவன் தந்தை தான் உனக்கு வேலைக்குச் சிபாரிசு செய்தது என்ற சங்கதியைக் கூறுதிருந்தது மிக்க நலமாயிற்று. ஆனல் அதனல் கெடுதியிருப்பதென்றல்ல நான் கூறுவது; அச் சங்கதி பகிரங்கமாகத் தெரிந்தால் பல பேர் அவர் தயவிற்காகச் சென்று அவரைத் தொந்தரை செய்வார்கள். அதற்காகத்தான்'' என்றாள்.

தேவராஜன்:—"ஏனம்மா! உனக்குமட்டும் அவர் தயவு எப்படிக் கிடைத்தது அம்மா?" என்றான்.

அதைக்கேட்டதே அம்மாதின் முகத்தில் ஒருவித மாறுதல் உண்டாயிற்று. ஆயினும் சட்டென்று அதை மறைத்துக்கொண்டு "ஆதியிலிருந்தே அவர்கள் குடும்பத்தைப்பற்றி எனக்குக் கொஞ்சம் அறிமுகமுண்டு. அதிருக்கட்டும், நீ அக்கன்னிகைகளைக் கண்டு பேசியதைப் பற்றிக் கவனிப்போம். அவர்களில் ஒருத்தியை விட மற்றொருத்தி அச்சுதன் வரவைப்பற்றிக் குறைந்த விருப்பமுடையவளாக விருந்தாளென்று கூறினையல்லவா?'' என்றாள்.

தேவராஜன்:—ஆம் ஆம், ஞானம்பாள் சம்பாஷணை முழுமையும், அவன் மறுபடி அங்கு வருவது தனக்கு விருப்பமில்லையென்று அவன் நன்றாய் அறியும்படி அவள் காட்டிக்கொள்வதுபோலிருந்தது.

தாயார்:—ஆனல் செல்வாம்பாள் அவன் வரவில் பிரியம் வைத்திருப்பவள்போல் நடந்துகொண்டாளோ? ஞானம்பாளைவிட அவள் அடக்க வொடுக்கங்களில் குறைந்தவளாகக் காணப்படுகிறாளாக்கும்.

தேவராஜன்:—இருவருடைய குணங்களையும் ஒப்பிட்டுக்

கூறுவதாயின் நான் செல்வாம்பாள்மேல் குற்றங் கூறுவதாக முடியும். ஞானம்பாள் மிக்க அடக்க முடையவளாகவும், புதிதாய்க் காணும் வாலிபர்களி டம் தாராளமாகப்பேச மிக்க நாணமுடையவளா கவு மிருக்கிருள். எப்போதும் அடக்க முடையவ ளாகவே யிருக்கிருள். செல்வாம்பாளோ சற்று டம் பாகாரமான உடையணிவதிலும், யாரிடமும்தாராள மாகப் பேசுவதிலும் பிரிய முடையவளாக விருக்கி ருள். வீண்பேச்சுகள் அதிகமாகப் பேசுவதில் மிக்க பிரியமுடையவள்.

தாயார்:—சரி, செல்வாம்பாள் புதியமனிதர்களிடம்கூடத் தாராளமாகப் பேசப் பிரியமுடையவளாக விருக்கி ருள். ஞானம்பாள் மிக்க அடக்க முடையவள். என் னைப்பற்றிக் கூட விசாரித்தாள் என்று கூறின யல்லவா?

தேவராஜன்:—"நான் உன்னைப் பற்றிப் பேசியபோது, ஞானம்பாள் உன்னைப் பன்முறை கோயிலில் கண்ட தாகவும், நீ தேகசுகமின்றி யிருப்பதாய்த் தான் கரு தியதாகவும், மிக்க இரக்கத்தோடு கூறி, இப்போது உன்தேகசுகம் எப்படி யிருக்கிறதென்று விசாரித் தாள். அச்சமயத்தில், தான் ஒரு சமயம் உன்னை வந்து காண விரும்புவதாக எங்கே கூறுவாளோ வென்று முன்னடியே உன்தேக சுகம் ஒருவரையும் வரவேற்கும் நிலைமையிலாவது ஒருவர் வீட்டிற்குச் செல்லும் நிலைமையிலாவது இல்லையென்று கூறி னேன்:" என்று கூறியவன் பின்னல் திரும்பிப் பார்த்ததும் "ஆ! அந்த அநாகரிகமான உடையு டுத்தக் கிழவி ஏன் நமது பின்னலேயே தொங்கிக்

கொண்டு வருகிருளென்று எனக்கு விளங்கவில்லை ” என்ருன்.

அதைக் கேட்டதும் அவன் தாயார் சட்டென்று திரும்பிப் பார்த்தாள். பின்னல் சற்று தூரத்தில் ஒரு கிழவி மெதுவாய் வந்துகொண் டிருப்பதைக் கண்டாள். அவளுக்கு வயது அறுபதிருக்கும். அவள் முகத்தைப் பார்க்கும்போதே துர்நடக்கையால் தேக நிலைமைகெட்டு வாடிவதங்கி விகாரசொரூபியா யிருக்கிருளென் றுணர லாம். அவள் உடைகளே அவள் தரித்திர நிலைமையைக் காட்டின.

தேவராஜ௳:—“ அம்மா ! இவள் கால்மணி நேரத்திற் கதிகமாகவே நமது பின்னல் வந்துகொண் டிருக்கிருள். நாம் எந்தவழியில் திரும்புகிருேமோ அந்த வழியில் திரும்புகிருள். இவள் யாசகம் செய்பவளா யின் தகுந்தபாத்திரமென்று தெரிந்தால் அவளுக்கு ஏதேனும் கொடுப்பேன். ஆனல் இவள் பார்வை எனக்குத் திருப்திகரமா யில்லை ” என்ருன்.

தாயார்:—“ ஆம் ஆம். ஆயினும் அவள் யாசகத்திற்கு வந்தவளாயின் தாராளமாக நம்முன் வந்து கேட்க லாமே. எப்படி யிருந்தாலும் அவளுக்குக்கொஞ்சம் காசுகொடுத்து அவளேப்போகச்சொல்லு” என்ருள்.

தேவராஜ௳ அவ்வாறே கொடுக்கலா மென்று பார்த்தபோது அக்கிழவி காணப்படவில்லை. அவள் அங்கிருந்த மரங்களில் எங்கோ மறைந்து கொண்டாள். இருவரும் அச்சங்கதியை யுடனே மறந்து விட்டார்கள்.

தேவராஜ௳ :—ஏனம்மா! இப்போது நான் துரைத்தன உத்தியோகத்தி லமர்ந்திருந்தாலும், முன் இருந்த கிராமவாசத்திற்கு இப்போது இப்பெரிய நகரவோரத்தி லிருப்பது உனக்குத் திருப்தியாக விருக்கிறதா?

தாயார்:—உன் க்ஷேமாபி விர்த்திக்கு வேண்டிய காரியங்களைச் செய்துகொண் டிருக்கும்போது எங்கேயிருந்தாலும் எனக்கு மிக்க சந்தோஷமே; ஆயினும் அக் கிராம வாசத்தில் தனியே வசித்துக்கொண் டிருந்தது மிக்க நிம்மதியாகவே யிருந்தது. நீயும் உன் சிறு வயதை யங்கேயே கழித்ததால் உனக்கும் அந்த விடத்தின்மேல் பிரியமாகவே யிருக்கும்.

தேவராஜன்:—ஆ! ஏனம்மா! அங்குதானே என் தந்தை யிறந்து போனது? என்று வினவினன்.

தாயார் உடனே அதற்கு விடையளிக்கவில்லை. சட்டென்று தன் சிரசைத் திருப்பிக் கொண்டாள். அச்சமயம் அம்மாதின் முகத்தில் பெருந்துயரமும் வெறுப்புமாகிய ஒருவித விகாரமுண்டாயிற்று. சற்று நிதானித்து "ஆம்" என்றாள்.

தேவராஜன்:—"அம்மா தங்கள் மனதிற்கு வியாகூலத்தை யுண்டாக்கும் சங்கதியைப் பிரஸ்தாபித்ததற்காக நான் மிக்க வியாகூலப் படுகிறேன். ஆனல் இந்த வயதில் நான் காண்பதற்குப் புண்ணியம் பெருத என் தந்தையின் சமாசாரங்களைப் பற்றி அறிய வேண்டுமென்று ஆவலுண்டாகு மல்லவா! ஆகையால் என்னை மன்னிக்க வேண்டும்" என்றான்.

அச்சமயம் அம்மாதின் மனம் பட்ட வேதனை கடவுளேயறிவார். ஆயினும் தன் புத்திரன் கூறியதற்குப் பதிலாக, "என் கண்மணியே! நீ கூறுவது உண்மையே ஆயினும் இச்சமயம் அச்சங்கதியை நிறுத்தி வேறு ஏதேனும் பேசுவோம்" என்றாள்.

தேவராஜன்:—"அம்மா அவ்வளவு கூறியதோடு போதும் உன் மனதிற்கு ஒருபோதும் நான் துயரத்தை யுண்டாக்கமாட்டேன்" என்றான்.

அச்சமயம் வேலைக்காரி வந்து போசனம் வட்டிக்கப்படுகிற தென்றாள். இருவரும் சென்று போசனம் செய்தான பிறகு மேல்மாடியிலுள்ள ஒரு அறையில் சென்றுட்கார்ந்தார்கள். தாயார் பூவேலைசெய்யத் தொடங்கினாள். தேவராஜன் ஒரு புத்தகத்தை யெடுத்து வாசித்துக்கொண்டே யிடை யிடையில் தாயாரோடு சம்பாஷித்துக்கொண் டிருந்தான். அவர்கள் இராப்போஜனம் செய்யும் வேளை ஆறுமணிக்கு முன்னாதலால் இன்னும் வெளியில் வெளிச் சமிருந்தது.

வாசித்துக் கொண்டிருந்த தேவராஜன் தற்செயலாகத் தலைநிமிர்ந்து சாளரத்தின் வழியாய்ப் பார்த்ததும் மிக்க வியப்படைந்து "ஆ! மறுபடி அக்கிழவி அதோ" என்றான். அவன் தாயார் உடனே அத்திக்கை நோக்கியதே கிழவி வீட்டின் வேலியோரம் நிற்பதைக் கண்டு, தன் வேலைக்காரியை யழைத்து இரண்டணா அவளிடம் கொடுத்து, "அவள் யாசகத்திற்கு வந்தாள்போ லிருக்கிறது. ஆனால் பயப்படுகிறா ளாக்கும், இதைக்கொண்டு போய் அவளிடம் கொடு" என்றாள்.

வேலைக்காரி அவ்வாறே சென்றாள். அவள் அந்தக் கிழவியிடம் சற்றுநேரம் பேசிக்கொண் டிருந்துவிட்டுத் திரும்பி வீட்டிற்கு வருவதைத் தாயும் மகனும் கண்டார்கள்.

தேவராஜன்:—"அவளுக்கு என்ன வேண்டுமோ தெரியவில்லை, கொஞ்சமாகக் கொடுத்ததாக நினைக்கிறாளோ? அல்லது அவள் உண்மையான பரிதாப நிலைமையைக் கூறக் கருதுகிறாளே?" என்றான்.

அதற்குள் வேலைக்காரி திரும்பி அறைக்குள் வந்து "அம்மா! அக்கிழவி தங்களை நேரில் கண்டு கொஞ்சம் வார்த்தையாட வேண்டு மென்கிறாள். தங்களை முன்னே அறிந்திருக்கிறாளாம்" என்றாள்.

இதைக்கேட்டதே தேவராஜின் தாய் "என்னையா அறிவாளாம்?" என்று திடுக்கிட்டுக் கேட்டாள்.

வேலைக்காரி:—ஆம் அம்மா! தாங்கள் வேறு விதமான நிலைமையி லிருக்கையில் தங்களை யறிவாளாம்.

தேவராஜு:—பாபம், அவள் நல்ல நிலைமையி லிருந்தவள் போலிருக்கிறது.

வேலைக்காரி:—"அம்மா! அவள் முகத்தைக்கண்டு தங்களுக்கு அவள் யாரென்று தெரியாவிட்டால் சின்னம்மாள் என்று ஞாபகப் படுத்தும்படி கூறினாள்." என்றாள்.

அதைக்கேட்டதே அம்மாது ஒன்றுங்கூறாமல் மரம் போல் இரண்டொரு விநாடிகள் அசையாமல் நின்றாள். ஆனால் அச்சமயம் யாரேனும் அவள் மனதிற்குள் நோக்கக் கூடியவர்களாக விருந்தால், அங்குண்டாயிருந்த பயங்கர விகாரத்தைக் கண்டு பிரமித்து விடுவார்கள். கடைசியில் அம்மாது நிதானமாய், "ஆம், அப்பெயர் கொண்ட ஒருத்தியை ஒருகாலத்தில் கண்டிருக்கிற நினைவு கொஞ்சமிருக்கிறது. பாபம் அவளைக்கீழே என் அறைக்கு வரச் சொல்லு" என்று கூறிவிட்டுச் சற்று சிந்தித்துத் தன் புத்திரனை நோக்கி, "ஆ குழந்தாய்! நான் சாப்பிட்டுக்கொண்டிருந்த மருந்து ஆய்விட்டது; முன்னமேகூற மறந்துவிட்டேன், அப்புட்டி அதோ மேஜைமே லிருக்கிறது" என்றாள்.

தேவராஜு புட்டியை யெடுத்துக் கொண்டு "நான் இதோ மருந்துக் கடைக்குப்போய் வாங்கிவந்து விடுகிறேன்" என்று கூறிவிட்டு வீட்டிலிருந்து புறப்பட்டான்.

எப்போதும் வழக்கமாக வேலைக்காரர் செய்யும் வேலையை இன்று தாயார் நம்மையேன் செய்யச்சொன்

ணர்கள் என்று அவன் சிந்தித்திருப்பானேல், இதில் ஏதோ விவகாரமிருக்கிற தென்று ஊகித்துக் கொண்டிருப்பான்.

அவன் வெளிச் சென்றதே அவன்தாய் கீழ் அறைக்குச்சென்று அங்கு வந்திருக்கும் கிழவியைக் கண்டாள். அப்போது அவள்முகத்தில் பயங்கரமான விகாரம்தோன்றியது. ஆயினும் சற்றுநேரத்திற்குள் மனதைத் தைரியப் படுத்திக்கொண்டு அக்கிழவியை நோக்கி,

" ஓ மூதாட்டியே ! நீ என்னிடம் பேசவிரும்பினயோ? உன் ஏழ்மை நிலைமையைப்பற்றி என்னிடம் கூற விரும்புவதாயின் அது வீண்போகாது. என்னுலான உபகாரத்தை யவசியம் செய்வேன் '' என்றாள்.

அம்மொழிகளைக் கேட்ட கிழவி மிக்க வியப்போடு திடுக்கிட்டு "என்ன ! நீ என்னை யறியாயா?'' என்றாள்.

அம்மாது:—நான் இதுகாறும் உன்னைப் பார்த்ததேயில்லையெனின் எப்படி நீ இன்னரென்றறிந்துகொள்வேன்?

மூதாட்டி:—" என்ன வியப்பா யிருக்கிறது. நான் அவ்வளவு மூடத்தனமாகவா யோசித்து விட்டேன்? நெடுநாட்க ளாய்விட் டிருந்தாலும், நான் அப்படி மறந்து விட்டிருப்பேனு" என்று கூறிக்கொண்டே அந்தம்மாளின் அருகிற்சென்று, " நான் யாரென்று தெரியவில்லை யெனில் சின்னம்மாள் என்றபெயர் நினைப்பிருக்கிற தென்று உன்வேலைக்காரியிடம் என் கூறினை ? '' என்றாள்.

அம்மாது "நான் அப்படி கூறவில்லை. உனக்கென்ன வேண்டுங் கூறு. என்னுலானதை யளிக்கின்றேன்'' என்றாள். அவ்வாறு பொய் கூறும்போது அம்மாதின் மனதில் பெரிய திகிலும் வேதனையும் உண்டாகி யிருந்தன.

அக்கிழவி அம்மாதின் முகத்தை யுற்றுநோக்கி, ஒருவிதமான வெறுப்பும் கோபமுமான பார்வையோடு

ஏதோ உன் செவியில் ஒருவார்த்தை கூறுகிறேன்'' என்று கூறியதும், அம்மாது நடப்பது இன்னதென்றறியு முன், அக்கிழவி குசுகுசு வென்று இரண்டொரு மொழிகளைப் புகன்றாள்.

அவற்றைக் கேட்டதும் அம்மாதின் முகம் சவம் போல் வெளுத்து விட்டது. அவள் அடியற்ற மரம்போல் ஆசனத்தில் சாய்ந்து விட்டாள். அவள் கண்களில் பயங்கரமான பிரகாஷி யுண்டாயிற்று. அவள் மனோ வேதனையித்தன்மையதெனக் கூறமுடியாது. அம்மாது பேச முடியாமல் பிராணாவஸ்தைப் படுவோர் நிலைமையி லிருந்தாள்.

அதைக்கண்ட ஆவேசம் போன்ற அக்கிழவி "ஆ! எனக்கு நிச்சயமாகத்தெரியும்; என்னை யடியோடு ஏமாற்றிவிடப் பார்த்தாய். அது முடியாத காரியம்'' என்றாள். அம்மாது, தன்னைக் கொல்லவந்த எமன் முன் நிற்பவர் எவ்விதமிரட்சியடைவார்களோ அவ்வாறு சுமார் இரண்டு மூன்று நிமிடங்கள் வரையிருந்து, திடீலென்று ஆத்திரத்தோடு அக்கிழவியின் தோளைப் பற்றிக்கொண்டு "இச் சங்கதியாவும் வேலைக்காரியிடம் கூறினாயோ'' என்று மிக்க ஆவலோடு கேட்டாள்.

கிழவி :—"பேசக் கூடாது. ஒரு வார்த்தைகூடக் கூறவில்லை. அப்படிக் கூறுவதால் எனக்கொரு பயனுமில்லை. நாம் இருவரும் கலந்து பேசி ஒருவர் அபிப்பிராயத்தை யொருவர் அறிந்து கொண்டால் எல்லாம் திருப்திகரமாகவே முடியுமென்று அறிவேன்'' என்றாள்.

அம்மாது "சரிசரி போதும், உனக்குப் பணம் வேண்டியது. நீயுன் தற்கால மிக்க பரிதாபமான நிலைமையினின்று நீங்கி க்ஷேம மடையும்படி செய்கிறேன்.

போதுமான பண மளிக்கிறேன். ஆனால் நீ மறுபடி என்னிடம் வரக்கூடாது. நான் உன்னிடம் சிக்கியிருக்கிறேனென் றெண்ணிக்கொண்டு மறுபடி வந்து பய முறுத்திப் பொருள் பறிக்கலாம் என்று கருதினையோ, நான் ஒருகாலும் உனக்குப் பயந்து நடப்பேனென்று கனவிலும் நினையாதே. அப்படி உனக்குப் பயந்து கொண்டு உயிர் வாழ்வதைவிட உடனே பிராணனையிழந்து விடுவேன்'' என்று கூறிக்கொண்டே மேஜைமேலிருந்த பணப்பையை யெடுத்துஅக்கிழவியிடம் கொடுத்தாள்.

கிழவியின் முகத்தில் ஒருவிதமான பயங்கர விகாரம் உண்டாயிற்று. அம்மாது அதைக் கவனிக்கவில்லை. ஆனால் கிழவியின் முகத்தில் உண்டான அவ்விகாரம் சற்றுநேரமே யிருந்தது. ஏனெனில் பணப்பையில் கையை விட்டு அதிலிருப்பதை யெடுத்துப் பார்த்த போது இருபத்து மூன்று பவுன்க ளிருந்தன. அக்கிழவிக்கு அது அதிகபணமாகத் தோன்றியது. அவள் அவ்வளவு பணத்தைக் கண்டு நெடுங்கால மாயிற்று. ஆகையால் அது மிக்க பெருந்தொகையாக அவளுக்குப் புலப்பட்டது. ஆகையால் அவள் உடனே சந்தோஷ மடைந்து "அம்மா! நீ பயப்பட வேண்டியதே யில்லை. எனக்குத் தாராளமாகப் பணம் கொடுத்து விட்டாய். இது நான் நல்ல நிலைமையில் நிற்க உதவிசெய்யப் போதுமானது. நான் இனி உனக்கு ஒரு தொந்திரையும் கொடேன். மறுபடி யிங்கு வரமாட்டேன்'' என்றாள்.

அம்மாது:—சரி நீ சீக்கிரமாய் இதைவிட்டுப் போய்விடு. நெடுநேர மிருந்தால் வேலைக்காரர்களுக்குச் சந்தேகம் உண்டாகும்'' என்றாள்.

கிழவி சென்றதும் அம்மாது தன் அறைக்குச் சென்று ஒரு சோபாவில் சாய்ந்துகொண்டு தன் நெற்

றியை ஒரு கரத்தால் கெட்டியாகப் பற்றிக்கொண்டு "அய்யோ கடவுளே! என்னை யேன் இப்படிப்பட்ட பயங்கரமான சோதனைக்குள்ளாக்குகிறீர்" என்று கண்களில் நீர் பெருக்கினுள்.

---

## 9-வது அத்தியாயம்.

### சகவாசதோஷம்.

மேற்கண்ட சம்பவங்கள் நடந்து மூன்று மாதங்கள் கழிந்தன. இந்த மூன்று மாதங்களுக்குள் தேவராஜு சுகவிலாசத்திற்கு அடிக்கடி செல்லவும் சகோதரிகளைக்கண்டு அவர்களிடம் வார்த்தையாடிக் கொண்டிருக்கவும் வழக்கமுடையவனுய் விட்டான்.

முதல் முதல் ஐந்துநாள் ஆறுநாட்களுக்கொரு முறை செல்வதும், அரைமணி நேரமே இருந்து பேசி விட்டு வந்துவிடுவதுமாக விருந்தான். பிறகு வரவர அடிக்கடி செல்வதும் நெடுநேரம் அவர்கள் சகவாசத்தி லிருப்பதுமான வழக்கமுடையவ னுய்விட்டான்.

நேயர்களே! ஒரு யௌவன வாலிபனும் ஒரு கன்னிகையும் அடிக்கடி சந்தித்து ஒருவரை ஒருவர் காண்பதனுலும் ஒருவரோ டொருவர் சம்பாஷிப்பதாலும் உண்டாகும் சந்தோஷத்தை யனுபவித்துக்கொண் டிருப்பார்களாயின், அவர்கள் நட்பு எங்கேனும், இரண்டு புருடர்கள் அல்லது இரண்டு மாதர்களது நட்புபோல் சாதாரண நட்பாகவே நீடித்திருக்குமோ? ஒருகாலுமில்லை. சாதாரணமாய் ஒரு ஸ்திரீயின் உருவத்தைக்கண்ட மாத்திரத்தாலே ஆடவனுக்கு அவள்மேல் குற்றமான இச்சை யுண்டாவது இயற்கையாக விருக்கிறது. விட்டிற்பூச்சி எப்படி ஒருதீப வொளியைக்கண்டு அந்த உருவத்தினுல்

மயங்கி, அதன் அருகிற்சென்று நெருங்கிக் கடைசியில் மடிகிறதோ, அதுபோலவே ஆடவனும் வெளித்தோற்ற மாகத் தோன்றும் உருவத்தை மட்டும் கண்டதே, அதற் குள் இருக்கும் கெட்ட அசுத்தங்களைச் சிந்தித்துக் கூடப் பாராமல், பின்னல் நேரிடக்கூடிய தீங்கையும் சிந்திக்கா மல் அதன்மேல் இச்சை கொள்கிறுன். அதுவுமன்றி ஸ்திரீயின் தொனியைக் கேட்பதையே யொரு பெரிய சுகமாகக் கருதி யதை யனுபவிக்கிறுன்.

அப்படிப்பட்ட ஆடவனும் ஒரு கன்னிகையும் அடிக் கடி கண்டு தாராளமாகப் பேசும் பழக்கமுடையவர் களானல், அப்பழக்கம் முதலில் சிநேகம் அல்லது சிநேக வாஞ்சை யென்ற உறவை யுண்டாக்குகிறது. அப்படிப் பேசும் இருவரும் ஆடவர்களாகவே, அல்லது மாதர்களா கவே ஒரே பாலாக விருந்தால் அந் நட்பு சிநேக வாஞ் சையாகவே முடிவு வரையில் இருக்கலாகும். ஆனல் ஒன்று ஆண்பாலாகவும் ஒன்று பெண்பாலாகவும், இரண் டும் யௌவன வயதாகவும் இருக்கிறமட்டில் அந்நட்பு கட்டாயம் காதலாக மாருமலிராது! இது உலக அனுபவ மானதோருண்மை.

நேயர்களே! நமது முன்னேர்களின் ஆசாரத்தை யலட்சியம் செய்து, "நமது பெண்கள் அன்னிய புருடர் களோடு தாராளமாகப் பேசலாகாதென்று அவர்களைச் சிறைவைப்பது போல் வைத்திருப்பது அநாகரீகம்" என்று கூறும் நண்பர்களே! இதைக் கவனியுங்கள்! நம் முன்னேர்கள் மேற்கண்ட காரணத்தால்தான் நமது பெண்மக்கள் நெறிபிறழாது கற்பரசிகளாகத் தெய்வீகத் தன்மை யடையவேண்டு மென்று கருதியே அவ்வாருன ஆசாரத்தை விதித்திருக்கிருர்க ளென்பதை இப்போ

தேனும் அறிமின். அறிந்து நம்முன்னோரின் ஆசாரப்படி ஒழுகுவோமாயின் நாம் சீர்படுவோமென்று நம்புமின்.

இயற்கை யிவ்வாறிருப்பதால், தேவராஜனும் அடிக்கடி அக்கன்னிகைகளைக் கண்டு பேசிக்கொண் டிருந்தவன், வரவர அவர்களிருவரில் ஒருத்தியின் மேல் காதல் கொண்டானென்று நாம் கூறுமலே நண்பர்கள் ஊகித்துக் கொள்ளலாகும். அவன் காதல் கொண்டது ஞானம்பாள் மேலேயே. செல்வாம்பாளை விட ஞானம்பாள் மிக்க அடக்க ஒடுக்க முடையவளாக விருக்கிறாளென்றும், கல்வியிலும், நீதியையும், புத்திமதியையும் புகட்டும் நூற்களையும் பக்தி நூல்களையும் ஆன்றோர் சரிதைகளையும் வாசிப்பதிலும் பிரிய முடையவளாக இருக்கிறாளென்றும், அவளுடைய யோக்கியதையும் குணங்களும் மிக்க நேர்மையானவை யென்றும் தேவராஜன் அறிந்து கொண்டான்.

அவன் அவளைக் காணும்போதெல்லாம் ஒவ்வொரு முறைமையும் அவளிடம் ஒவ்வொரு நற்குணங்களிருக்கக் கண்டான். அவன் தன் தாய்க்கு மறைத்து வைத்திருக்கும் இரகசியம் இல்லவேயில்லை. ஆனால் இந்த ஒரு விஷயமட்டும் அவன் தன் தாய்க்குக் கூறவில்லை. முதற் காதலை யவ்வாறு தாய்க்கும் கூறாது மறைத்துவைப்பது இயற்கையேயன்றோ. சுகவிலாசம் தன் வாசஸ்தலத்திற்கு அருகாமையிலேயே யிருந்த போதிலும், தன் புத்திரன் அக்கன்னிகைகளிடம் பேசிக்கொண் டிருக்கிறான் என்பதை யறியாமல் அவன் தூரத்திலுள்ள தன் உத்தியோக சாலையிலிருக்கிறானென்றே அவன் தாய்கருதி யிருக்கிறாள்.

தேவராஜன் அவ்வாறு ஞானம்பாள் மேல் காதல் கொண் டிருந்தாலும் வெளிக்கு அதைச் சற்றேனும் காட்டிக்கொள்ளவே யில்லை. தேவராஜைப் போல் கனம்

அச்சுதனும் சுகவிலாசத்திற்கு அடிக்கடி வரும் பழக்க முடையவ னுய்விட்டான். ஞானம்பாள் அவன் அங்கு வருவது தனக்குப் பிரியமில்லையென்று காட்டிக்கொண்டே யிருந்தாள். ஆனல் செல்வாம்பாள் அவன் வருவதற்கு இடங் கொடுத்தாள். ஞானம்பாள் அதைப்பற்றிச் செல் வாம்பாளுக்குத் தன்னுலான வரையில் புத்திமதி கூறி னுள்; பிறகு கோபமாகவும் கூறிப்பார்த்தாள். வெறுப்பு காட்டிப் பார்த்தாள். என்ன செய்தும் பயனில்லை. ஆயி னும் தான்மட்டும் அவனிடம் சற்றும் முகம்கொடுத்துப் பேசுவதே யில்லை. செல்வாம்பாளை யின்னும் அதிக மாகக் கண்டித்தால், தங்களுக்குள்ளேயே மனஸ்தாபம் நேரும்போ லிருப்பதால் கடைசியில் அதைப்பற்றிப் பேசு வதையே விட்டு விட்டாள். அச்சுதனும் அங்கு அடிக்கடி வந்து கொண்டிருந்ததால் இவனும் தேவராஜனும் அங்கு அடிக்கடி சந்திக்கவும் பேசவும் நேர்ந்தது. அச்சுதனேடு சினேகம் செய்துகொள்ள வேண்டாமென்று தன் தாயார் கூறியதைத் தேவராஜன் மறந்துவிட வில்லை. ஆகையால் அவன் தானே யவனேடு பேசவும் சினேகம் பாராட்டவும் கருதாமல் கூடியவரையில் எச்சரிக்கையாகவே யிருந் தான்.

ஆயினும் அச்சுதன் மிக்க தந்திர சாமார்த்திய முடையவன்; உலக அனுபவம் தந்திரம் கபடு சூது முதலிய விஷயங்களிலும் மிக்க சாமார்த்தியவான். ஆகையால் "தேவராஜின் மேல் சகோதரிகள் இரு வரும் பிரியம் வைத்து நடந்து கொள்கிறுர்கள் ஆதலால் நாமும் அவனிடம் மிக்க சினேக பாவமாக நடப்பது போல் அபிநயம் செய்தால்தான் இச் சகோதரிகள் நம் மேல் பிரியமாக விருப்பார்கள் என்று தனக்குள் தீர் மானித்துக்கொண்டு அவ்வாறே நடக்கத் தொடங்கினன்.

அச்சுதன் தேவராஜிடம் உண்மை விசுவாசமும் மரியாதையு முடையவன் போலேயே நடக்கத் தொடங்கினன். அவன் அவ்வாறு பகிரங்கமாக நடந்து வரும் போது தேவராஜு எவ்வளவு காலம் அவனிடம் சம நட்பு காட்டாமல் இருக்க முடியும். அப்படி யிருந்தால் மற்றபேர் தன்னிடம் பெருந்தன்மை யில்லையென்றும் தான் அகங்கார முடையவ னென்றும் கருதுவார்கள். ஆகையால் தேவராஜு வரவர அச்சுதனிடம் சாதாரண மாகச் சினேகம் பாராட்டி நடக்கத் தொடங்கினன். இதனல் தன் தாயாரின் கட்டளைக்கு மாருக நடப்பதாய் அவன் கருதவில்லை. ஏனெனில் தன் தாய் அவனிடம் சினேகம் செய்ய வேண்டாமென்று தனக்குக் கட்டளை யிட்டதன் காரணம், அச்சுதன் குலப் பெருமையுடைய வன், அவனேடு நாம் சினேகம் செய்தால் அவன் நம்மை அலட்சியமாக நடத்தினல் நமக்கு மன வியாகூல முண்டா கும் என்பதே. இப்போது அவன் அம்மாதிரி யின்றி நம் மோடு சலகரணையாகவும் சினேக வாஞ்சையோடும் நட ந்து கொள்ளுகிற படியால் நம் தாயார் கூறிய காரணம் நடைபெறவில்லை யாதலின் நாம் அவனிடம் சினேக பாவ மாய் நடந்துகொள்வது குற்றமல்ல என்று கருதினன்.

அச்சுதன் மூன்றுமாத காலமாக அங்கு வந்து கொண்டிருந்த போதிலும் இரண்டு சகோதரிக ளிடத்தி லும் ஒரே விதமான மரியாதையோடு நடந்து கொள்வ தாக அபிநயித்துக் கொண்டிருந்தானே யன்றி, ஒருவர் மேலாவது விசேஷ அன்பு காட்டுகிறவனகக் காட்டிக் கொள்ளவில்லை. மிக்க யோக்கியதையும் கௌரவமும் உடையவன் போலவே நடந்து கொண்டிருந்தான்.

ஞானம்பாள் தன் சகோதரி தன் எச்சரிக்கையை யலட்சியம் செய்து விட்டபின் அச்சுதன் வருவதைப்பற்றி

வெறுப்பு காட்டுவதை விட்டு விட்டாள். அதோடு அவன் தந்திரமாகப் பரமயோக்கியன் போலவே நடந்து வந்த தால் "அவனைப் பற்றி நமக்கு வந்த கடிதம் கடைசியில் பொய்யாகத்தான் இருக்குமோ" என்று அவள் மனதில் ஐயமுண்டாயிற்று. இயற்கையாகவே அவள் பெருந் தன்மையான குணமுடையவளானதால் "அந்தோ! நாம் அநியாயமாக அக்கடிதத்தை நம்பிக் கொண்டு அவன் மேல் கெட்ட அபிப்பிராயம் கொண்டோமே" என்று மனதில் நினைத்துக் கொண்டாள்.

அதனுல் போகப்போக அவன் வரவைப்பற்றிக் கொண்டிருந்த வெறுப்பு கொஞ்சங் கொஞ்சமாகப் போய் விடவே, அவனிடம் அன்பு காட்டாவிட்டாலும் சாதாரணமாக நடந்துகொள்ளத் தொடங்கினுள்.

வசந்தகாலம் பிறந்துவிட்டது. பூமிதேவி தன் தேகத் தைப் பசும்புற்களாலாகிய பட்டுச் சேலையாலும் பலவித நிறங்களையுடைய மலர்களாகிய யணிகளாலும் அலங்கரித் துக்கொண்டாள். தென்றற்காற்று மிக்க சுகமாக வீசிக் கொண்டிருந்தது. ஒருநாள் காலை பத்து பதினொரு மணிக்கு ஞானம்பாள் தோட்டத்தில் உலவச் சென்றுள். செல்வாம்பாள், வீட்டில் ஒரு நாவலைவாசித்துக் கொண் டிருந்தாள்.

அச்சமயம் அச்சுதன் வீட்டிற்கு வந்தான். அவன் சாதாரணமாக வரும் வேளைக்கு ஒருமணி நேரத்திற்கு முன்பே அன்று வந்தான். அவன் முன்யோசனை யின்றி அப்படி வரவில்லை. அவன் கருத்தாவது சகோதரிகளில் ஒருத்தி தனியாக விருக்கும் சமயத்தில் வரவேண்டு மென்பதே. அதற்காகத் தக்கசமயம் பார்த்துக்கொண் டிருந்தான். அன்று கால் நடையாகவே வந்தபடியால் அவன் வரவை வீட்டிலுள்ள ஒருவரும் கவனிக்கவில்லை.

அச்சுதன் வீட்டின் மதில்சுவரிலுள்ள வாயிற்படியைக்கடந்து இடையிலுள்ள இடத்தைத்தாண்டிக் கட்டடத்தை நோக்கி வரும்போது, தோட்டத்தில் உலவும் ஞானம்பாளைக் கண்டான். உடனே நேராய் வீட்டிற்குள் செல்லாமல் தோட்டத்தில் நுழைந்து குறுக்குவழியாக ஞானம்பாளிருக்கும் இடத்தை நோக்கிச் சென்றான்.

ஞானம்பாள் அவன் வருவதைப் பார்க்கவில்லை. தோட்டத்தின் மறு கோடியை நோக்கிச் சென்றுகொண்டே இருந்தாள். அவள் பின்புறமே அச்சுதன் பக்கமாக விருந்தது. ஞானம்பாள் அங்கிருந்த ஒரு சிலையருகில் நின்று அதன் அழகைப் பார்த்துக்கொண் டிருந்தாள். அச்சுதன் மெதுவாக, அவள் பின்னழகைப் பார்த்துக்கொண்டே சென்றான். கடைசியில் ஞானம்பாள் ஒரு புஷ்பச் செடியருகில் நின்று குனிந்துபார்த்தாள். அச்சமயம் யாரோ பின்னால் வரும் காலடிச் சத்தம் அவள் செவிகளில் கேட்டது. உடனே அவள் திரும்பிப் பார்த்தாள்.

அச்சுதன் அங்கு வருவதைக் கண்டதே அவளுக்குண்டான வியப்பு கொஞ்சமல்ல. ஏனெனில் தான் அவன் வரவிற்காக வெறுப்பு காட்டி நடப்பதால் அவன் தன்னிடம் சம்பாஷிப்பதை விடத் தன் சகோதரியிடம் சம்பாஷிப்பதற்கே பிரியமுள்ளவனாக விருப்பான் என்பது அவள் அபிப்பிராயம். அதனால்தான் அவளுக்கு மிக்க வியப்பாக விருந்தது.

அச்சுதன் ஞானம்பாளருகில் வந்ததும், வந்தனம் புரிந்து "நான் திடீலென்று இப்படி யகாலத்தில் வந்ததற்காக மன்னிப்பு கேட்டுக்கொள்ள வேண்டும். நான் தற்செயலாக இப்படி வரவில்லை. ஒரு உத்தேசத்தைக் கொண்டே வந்தேன்" என்றான்.

ஞானு:—“ஆ! அப்படியா” என்ருள். அவன் ஏதோ அற்பகாரியத்தையே கூறுவானென்று அவள் கருதினுள்.

அச்சுதன்:—ஆம் ஒரு காரியத்தை யுத்தேசித்தே இப்படி முன்னடி வந்தேன். கடந்தமூன்று மாதங்களாக உங்களைக்கண்டு உங்களுடன் சம்பாஷித்துக் கொண்டிருந்து, உங்கள் இருவரில் ஒருவர் மேல் காதல் கொள்ளாமலிருக்க யாரால் முடியும். அந்த உருவத்தை யடிக்கடி கண்ணாரக் கண்டு களிக்கவும் அவள் இனிய மொழிகளைக்கேட்டு ஆனந்தங்கொள்ளவும்... ஆ! கன்மன முடையவ னெனினும் அவன் மனம் கரையாதிருக்குமோ!” என்ருன்.

ஞானு:—ஆ! இவன் செல்வாம்பாள் மேல் காதல்கொண்டிருக்கிருன். மிக்க ஒழுங்கான நடக்கையுடையவன். அதனுற்ருன் முன்னே நம்மிடம் அதைப்பற்றிக் கூறி நமது அனுமதியைப் பெறக்கருதியே நம்மிடம் வந்தான் என்று தனக்குள் கருதிக்கொண்டாள்.

முன் இருந்ததைவிட இப்போது ஞானம்பாளுக்கு அவன் விஷயத்தில் மிக்க நல்ல அபிப்பிராயம் உண்டாயிற்று. ஆகையால் பிரியத்தோடு “ தாங்கள் எனக்குச் செய்யும் கௌரவத்திற்காக வந்தனமளிக்கிறேன். மேலும் எனக்குக் கௌரவம் காட்ட இதைப்பற்றி முதல் முதல் என்னிடம் உத்தேசிக்கக் கருதி வந்ததற்காக வந்தனமளிக்கிறேன். ஆனல் நான் இரண்டொரு கேள்விகளைக் கேளாமல் தங்களுக்கு எப்படி விடையளிப்பதென்று எனக்குப் புலப்படவில்லை ” என்ருள்.

அச்சுதன்:—ஆகா! எத்தனை கேள்வி வேண்டுமாயினும் கேட்கலாம். நான் எதையும் ஒளிக்காமல் தாராளமாய் விடையளிக்க ஆயத்தமாக விருக்கிறேன்.

ஞானு:—இப்போது தாங்கள் உத்தேசித் திருக்கும் காரியம் தங்கள் பெற்ருேருக்குத் தெரியுமோ?

அச்சு:—இல்லை, தெரியாது; முதலாவது நான் இதைப் பற்றி அவர்களிடம் கூறுமுன், என் காதல் ஏற்றுக் கொள்ளப்படும் என்ற நிச்சயம் எனக்குத் தெரிய வேண்டும். என் தந்தை சில முரட்டு அபிப்பிராயங் களையுடையவர். அவர் சம்மதிக்கும்படிச் செய்யக் கொஞ்சகாலம் செல்லும். அதோடு நான் மிக்க ஜாக்கிரதையாக நடந்து கொள்ள வேண்டும். ஏனெனில் என் தந்தை யுயிரோ டிருக்குமட்டும் என்செலவிற்கு வேண்டிய பணத்திற்கு அவர்கையையே நான் எதிர்பார்த்துக்கொண் டிருக்கவேண்டும்'' என்ருன்.

ஞானு:—தாங்கள் உள்ள விஷயத்தை மறைக்காமல் கூறி விட்டதற்கு மிக்க வந்தன மளிக்கிறேன். ஆயினும் தங்கள் தந்தையின் முரட்டு அபிப்பிராயங்கள் என்பதைப்பற்றி.......

அச்சுதன்:—ஆ! உலகில் உண்மையான எந்தக்காதல் விஷயந்தான் இடையூறின்றி நிறைவேறுகிறது? கொண் டிருக்கும் காதல் நிலையானதாக விருந்தால் எத்தகைய இடையூறுகளுக்கும் அது அஞ்சுவதில்லை. எந்த இடையூருயினும் சரி, அதை விலக்கிவிட்டு நமது காரியம் கைகூடச்செய்வோம் என்ற துணிகரமே அக்காதலின் உண்மையைக் காட்டுகிறது. என்காதல் பரஸ்பரக் காதலாக ஏற்றுக்கொள்ளப் படுமென்று நான் மிக்க நம்பிக்கையோடு சந்தோஷங்கொண் டிருக்கிறேன். அப்படி ஏற்றுக்கொள்ளப்படுவதாயின் நாம் ஆலசியம் செய்ய வேண்டிய அவசியமே யில்லை. இரகசியமாகக் கலியாணத்தை

நிறைவேற்றிக் கொள்ளலாம் என்பதே யென்கரு த்து'' என்றான்.

இதைக்கேட்டதே ஞானம்பாள்முகம் பூரணமாறுத லடைந்தது. அவள் மனதிலேயே ஒருவித மாறுதலுண்டா யிற்று. ஆகவே அவள் சற்று ஆத்திரத்தோடு ஆனால் உறுதியான தீர்மானத்தோடு "ஒருகாலும் முடியாது. இது நடவாதகாரியம். செல்வாம்பாள் இதற்கு ஒருபோ தும் சம்ம......'' என்பதற்குள்,

அச்சுதன் கலக்கத்தோடு, "இருக்கட்டும் இருக்கட் டும்; உன் சகோதரிக்கு இந்த ஏற்பாடு சம்மத மில்லா திருந்தால் இருக்கலாகும். ஆனாலும் நான் கூறுவதற்குப் பல காரணங்க ளிருக்கின்றன. முதலாவது எனக்கு விவ காரதிசை வந்துவிட்டபடியால் நான் இரகசியமாக மணம் செய்து கொண்டாலும் அது சட்டப்படி செல்லும். இரண்டாவது என் பெற்றோருடைய மூடத்தனமான முரட்டு அபிப்பிராயங்களுக்காக நான் என் வாழ்நாளின் சந்தோஷ சுகத்தை யடியோ டிழந்துவிடவேண்டிய அவ சியமில்லை. மணம் முடிந்தபின் நல்ல தனமாக என் பெற் றோரின் சம்மதத்தைப் பெறும் வரையில் நானும் என்னை மணம் புரிபவளும் நாணயமாகச் சீவனம் செய்யப்போது மானபொருள் இப்போது கையிலிருக்கிறது. ஆகையால் என் மணத்தை யாலசியம் செய்யவேண்டிய காரணம் உண்மையில் ஒன்றுமில்லை'' என்றான்.

ஞானம்பாள் "நீர் யாவும் களங்கமின்றிக் கூறியதற் காக நான்மிக்க சந்தோஷ மடைவதோடு வந்தனமுமளிக் கிறேன். மேலும் நீர் நல்ல எண்ணத்தோடேயே யிவ்வள வும் கூறுகிறீர். இந்தமாதிரி அபிப்பிராயப் படுகிறீர் என்றே நம்புகிறேன். ஆயினும் இத்தகைய கலியாணத்

திற்குச் செல்வாம்பாளுக்கு ஒருபோதும் என் சம்மதியை யளிக்கவேமாட்டேன்'' என்ருள்.

இதைக் கேட்டதே அச்சுதன் திடீலென்று ஜலத்தில் மூழ்த்தப் பட்டவன்போல் திணறிக்கொண்டே "என்ன! செல்வாம்பாளுக்கா!" என்ருன். அவன் மனம் பூரணக் கலக்கத்தில் வீழ்ந்து விட்டது. நடுக்கடலில் கப்பலோட்டிச் செல்லும் ஒரு கப்பித்தான் நள்ளிருளில் திடீலென்று தன் கப்பலின் சுங்கான் உடைந்துபோய் திசையறி கருவியும் காணுமற் போகக்கண்டால் எவ்வாறு செய்வதின்னதென வுணராது தத்தளிப்பானே, அவ்வாறே அச்சுதன் திகைத்து தட்டென்று நின்றுவிட்டான்.

ஞானம்பாள் "ஆம். என் சகோதரி தங்களைக் கள்ளத்தனமாக மணம்புரிந்து கொள்ளும்படி நான் ஒருபோதும் அனுமதி யளிக்கமாட்டேன். இதுகாறும் அவள் தங்களைச் சாதாரணமாக அறிமுகமான ஒரு மனிதராகக் கருதியிருக்கிருளே யன்றி, வேறுவிதமாய்க் கருதி நடக்கவில்லை யென்று நான் நம்பிக்கையாய் அறிவேன். ஆகையால் தங்களுக்கும் தங்கள் பெற்ருேருக்கு முள்ள அபிப்பிராய பேதங்கள் இப்போதிருக்கும் நிலைமையை நோக்கத் தாங்கள் அவள்மேல் காதல்கொண்டிருக்கும் விஷயத்தை யவளுக்கு அறிவிக்கலாகாது'' என்று தீர்மானமாகக் கூறினுள்.

அச்சுதன் மிக்க வியப்பும் கலக்கமுமடைந்து "ஆ! கடவுளே! இத்தகைய தவறு நேரிடுமோ! ஓ ஞானம்பாள்! நான் கூறியவை யாவற்றையும் நீ தவருகக் கருதிக் கொண்டாய். நான் காதல்கொண் டிருப்பது உன் சகோதரிமேலல்ல. உன்மேலேயே'' என்ருன்.

இப்போது ஞானம்பாளுக் குண்டான ஆச்சரியமும் கலவரமும் நாணமும் கொஞ்சமல்ல. இது அவள் எள்ள

ளவும் எதிர்பாராத வண்ணமாய்த் திரும்பிவிட்டது. அவள் ஆரம்பம் முதலே "அச்சுதன் தன் சகோதரிமேல் தான் காதல்கொண் டிருக்கிறன். அவளிடம் அதைவெளி யிடுமுன் நம்முடைய அனுமதியைப்பெறவந்தான். இவன் மிக்க ஒழுங்கான நடக்கை யுடையவன்" என்றே மனப் பூர்வமாக நம்பியிருந்தாள். இப்போது அவளுக்கு உண் மையில் அவன்மேல் வெறுப்பும் சந்தேகமு முண்டாயின. ஏனெனில், அவன் தங்கள் வளவிற்குவரத் தொடங்கியது முதல் அவள் ஒரு சமயத்தில் கூட அவனிடம் எள்ளள வேனும் அன்புகாட்டிப் பேசியவளல்ல. அதற்குமாருக அவன் அங்கு வருவதேதனக்கு விருப்பமாயில்லையென்று காட்டிக்கொண் டிருக்கிருள். ஆகையால் ஒரு ஸ்திரீ சற் றேனும் தன்னிடம் சினேகவாஞ்சை கூடக் காட்டாதிருக் கும்போது அவள்மேல் தனக்குக் காதலிருக்கிறதென்று அவளிடம் கூறும் நடக்கை தகுதியான தல்லவென்பது அவளுடைய அபிப்பிராயம்.

ஆயினும் தன் வெறுப்பையும் கலக்கத்தையும் சட் டென்று மறைத்துக் கொண்டு சாந்தமாகவே அச்சுதனை நோக்கி,

"அய்யா! ஆம், நான் எப்படியோ முதலி லிருந்து தவருகவே கருதிக்கொண்டேனென்று இப்போது எனக் குத் தெரிகிறது. ஆயினும் தாங்கள் என்மேல் வைத்த கௌரவ நோக்கத்திற்காகத் தங்களுக்கு வந்தன மளிக்கி றேன். ஆனல் விடையென்னமோ நான் மறுபடி......" என்பதற்குள்,

அச்சுதன் ஆத்திரத்தோடு "ஆ! என் சந்தோஷத் தை யடியோடு கெடுத்து விடாதே. நான் எவ்வளவோ நம்பிக்கை வைத்திருக்கிறேன். உண்மையில் நான் உன் மேல் கொண்டிருக்கும் காதல்......" என்பதற்குள்,

ஞானம்பாள் முகம் சிவந்து நன்றாய் நிமிர்ந்து நின்றாள். அப்போது அவளுடைய பார்வை எதற்கும் அஞ்சாது நோக்கும் கம்பீரம் பொருந்திய ஒரு சிங்கத்தின் பார்வைபோ லிருந்தது. அவள் அச்சுதனை நோக்கி அவசரத்தோடு,

"போதும், உமது பேச்சை நிறுத்துமையா. உமது வாக்கிலிருந்து வரும் அத்தகைய மொழிகளை நான் செவியேற்கலாகாது. தெரிகிறதா? நான் உமக்கு, எள்ளளவு, கடுகளவு நம்பிக்கையேனும் அளிக்க முடியாது. அதைப் பற்றி நான் சிந்திக்கவே முடியாது" என்றாள்.

அச்சுதன் :—ஓ! அப்படிக் கூறவேண்டாம். நான் கொண்டிருக்கும் சந்தோஷத்தை யடியோடழித்து என்னைத் துயர்க்கடலில் அமிழ்த்தி விட வேண்டாம். என் காதல் பூரணமானது. நான் உன்னைத் தேவ மாதாகக் கருதி யிருக்கிறேன்......" என்று கூறிக் கொண்டே அவள் கரத்தைப்பற்றிக் கொண்டான்.

ஞானம்பாள் மிக்க கோபமடைந்து, "இதுதகாது, விடுமையா என் கரத்தை" என்று கூறி உடனே தன் கையை வெடுக்கென்று இழுத்துக் கொண்டாள்.

அச்சுதனுக்கு ஆத்திரம் அதிகமாய் விட்டது. தன் நடக்கை ஒழுங்கான தென்றும் ஒழுங்கற்ற தென்றும் அச்சமயம் அவனுக்குத் தோன்றவில்லை. தன் எதிரிலுள்ள கன்னிகையின் பேரழகே அவன் மனதையடியோடு தன் வசப்படுத்திக் கொண்டிருந்தது.

அந்தோ, மனதைக் கடிவாளமற்ற புரவி போல் விட்டு விட்டு அது முரட்டுத்தனமாய் இழுத்தவழி யெல்லாம் சென்றுகொண் டிருப்பவனுக்கு அச்சமயத்தில் அறிவாகியகண் அடியோடு மூடப்பட் டிருப்பது அதிசயமாகுமோ. அதிலும் ஸ்திரீயிச்சை சன்னியாசிகளையும்

இருடிகளையுங்கூட மயக்கத் தக்கதெனில், வலிய அதை யெதிர் நோக்கிச் செல்லும் காமுகனை மயக்குவது அதற்குக் கஷ்டமோ? அதனாலன்றோ ஞானவான்கள் மாதர் முகத்தையே யேறெடுத்துக் காண அஞ்சுகின்றனர்; அவர்களைக் கண்டாலும் நச்சரவினும் கொடிதென வெருண்டு எட்டக் கிடக்கின்றனர். வாலிப பருவத்தை யடியோடு சிற்றின்பம் முதலிய தீவழிகளிலேயே கழிக்கும் அச்சுதன் அச்சமயம் தன் மனதை யடக்கவாவது சிந்திக்கவாவது முடியாமல் "ஓ ஞானம்பாள்! நீ என்னை மணந்துகொண்டே தீரவேண்டும்" என்று கூறிக்கொண்டே பாய்ந்து போய் அவளை யிருகரங்களாலும் தழுவிப் பிடித்தான்.

ஞானம்பாள் கற்புடைய கன்னிகை யானதால், அவள் தேகம் முழுமையும் நடுக்கமுற்றது. அவளுக்கு அடங்காக் கோபமும், துயரமும், திகிலும் உண்டாயின. ஆயினும் எப்படியோ அச்சமயம் அவளுக்குப் புருஷபலம் உண்டாயிற்று. அவள் அலறிக்கொண்டே ஆவேசம் வந்தவள் போல் தன்னைப்பற்றிய அச்சுதனை யொரேயுதறில் உதறி விட்டுத் தன்னை விடுவித்துக் கொண்டாள்.

அதே சமயம் மின்னல்போல் யாரோ வேறொரு உருவம் சமீபத்திலிருந்த மரங்களினிடையி லிருந்து வந்து அச்சுதன் மேல் ஒரே பாய்ச்சலாகப் பாய்ந்ததும் அச்சுதன் தடாலென்று பூமியில் வீழ்த்தப் பட்டான். மறு விநாடிதான் அவ்வாறு வந்தவன் தேவராஜு என்று மற்ற இருவர்க்கும் தெரிந்தது.

கீழே வீழ்ந்த அச்சுதன் புரண்டெழுந்து அடக்க முடியாத பெருங் கோபத்தோடு தேவராஜின் மேல் பாயப்போனான். அதைக் கண்ட ஞானம்பாள் அய்யா போதும்; அக்கிரமமான முரட்டு நடக்கையை யிங்கு காட்

டாமல் மரியாதையைக் காப்பாற்றிக் கொள்ளும்'' என்ருள்.

அச்சுதன் அப்படியே யாகட்டும் என்று மட்டும் கூறிவிட்டு உடனே அதிதுரிதமாக அங்கிருந்து வெளிப் பட்டான். இப்போது தேவராஜு சமயத்தில் எப்படி அங்குவர நேர்ந்தது என்று கவனிப்போம். அன்றைய தினம் தேவராஜின் மேல்அதிகாரியின் வீட்டில் ஏதோ சுபகாரியம் நடப்பதால் உத்தியோகஸ்த ரனைவர்க்கும் விடுமுறை யளிக்கப்பட்டது. ஆகையால் தேவராஜு தன் வீட்டை நோக்கிவரும்போது வழியிலிருந்த சுக விலாசத்திற்குச் சென்ருன். வெளிவாயிற்படிக்குள் நுழைந்ததும் வேலைக்காரி, செல்வாம்பாள் தன் உடுப் பறைக்குச் சென்றவள் நெடுநேரமாகியும் வெளியில் வரவேயில்லை யென்றும், ஞானம்பாள் மட்டும் தோட்டத் தில் உலவச் சென்றிருப்பதாகவும் கூறினாள்.

தனியாக ஞானம்பாளோடு சம்பாஷிக்கச் சமயம் வாய்ந்ததுபற்றித் தேவராஜு மிக்க சந்தோஷமடைந்து துரிதமாகத் தோட்டத்தில் பிரவேசித்துச் சென்ருன். அவன் அங்குள்ள ஒரு பாதையில் திரும்பிச் சென்ற போது மரங்களுக்கிடையில் சமீபத்திலேயே ஞானம் பாளும் அச்சுதனும் பேசிக்கொண் டிருப்பதைக் கண் டான். அவன் சமீபத்தில் நெருங்கிவிட்டபடியால் அவர் கள் சம்பாஷணையவன் செவிகளில் வீழ்ந்தது.

முதலில் அச்சுதன் காதல் விஷயமாகப் பேசுவதைக் கேட்டதே தேவராஜு திடுக்கிட்டுவிட்டான். அவன் முதலில் அச்சுதன் ஞானம்பாள் மேலேயே காதல் கொண்டிருக்கிருனென்று கருதியபடியால் ஞானம்பாளும் அப்படியே யுணர்ந்திருக்கிருளென்று எண்ணிக்கொண் டான். அதனல் ஞானம்பாள் தவருய்க் கருதி '' நீர்

எனக்கு அளிக்கும் கௌரவத்திற்காக வந்தனமளிக்கிறேன்'' என்று கூறியதைக்கேட்டதும் அவனுக்குண்டான மனோவேதனை கூறற்பாலதன்று.

அச்சுதன் இரகசிய கலியாணத்தைப்பற்றிக் கூறியதே தேவராஜன் "ஆ! இப்போது ஞானம்பாள் சம்மதிக்கிறாளா பார்ப்போம்'' என்று தனக்குத் தானே கூறிக்கொண்டு ஆவலோடு அவள் அளிக்கும் விடையை யெதிர்பார்த்துக்கொண் டிருந்தான். கடைசியில் அவள் "செல்வாம்பாள் இவ்வாறு உன்னை இரகசிய மணம்புரிவதற்கு நான் அனுமதி யளிக்கமாட்டேன்'' என்று கூறியதைக் கேட்டதே ஆ அவனுக்குண்டான சந்தோஷத்திற்கோ ரளவேயில்லை. அப்போதுதான் ஞானம்பாள் முதலிருந்து தவருகவே கருதிக்கொண் டிருந்தாள் என்று அவனுக்கு விளங்கியது.

பிறகு அச்சுதன் "நான் செல்வாம்பாள் மேல் காதல் கொள்ளவில்லை; உன்மேல்தான் கொண்டிருக்கிறேன்'' என்று ஞானம்பாளிடம் கூறியபோது, மறுபடி தேவராஜின் மனம் திடுக்கிட்டது. ஆனால் அதற்கு அவள் அளித்தவிடையைக் கேட்டதே அவனுக்குப் பேரானந்தம் உண்டாயிற்று. பிறகு அத்துஷ்டன் அவ்வாறு துராக்கிருதமாய் நடந்தபோது தேவராஜன் கோபத்தால் தன்னை மறந்து அவனைத் தாக்கினான்.

அச்சுதன் சென்றதும் ஞானம்பாள் தேவராஜன் சமயத்தில் தன் மானத்தைக் காப்பாற்றியதற்காக அவனிடம் மிக்க நன்றி பாராட்டி வந்தனமளித்து, தன் அன்பையும், தேவராஜன் தனக்கு உதவிசெய்ததால் எங்கே துன்பத்திற்குள்ளாவானோ வென்ற பீதியையும் மறைக்கமுடியாது அவனை நோக்கி,

"எனக்கு உதவி செய்ததால் விபரீதமான விஷயம்

ஒன்றிற்கும் இடமளிக்காதிருக்க வேண்டிக் கொள்ளுகிறேன்'' என்ருள்.

தேவராஜன் அதற்கு நேராக விடையளிக்காமல் ஜாடையாகப் பல வார்த்தைகள் கூறி "உன் பிரியத்திற்கு மாருக நடக்கமாட்டேன் என்ற கருத்தாகப் பேசினுன். ஞானம்பாள் மறுபடியுங்கூட அதைப்பற்றி எச்சரிக்கை செய்து விட்டு "நான் உடனே சென்று என் சகோதரியிடம் நிகழ்ந்த சங்கதிகள் யாவும் கூறவேண்டும். ஆகையால் தற்சமயம் தாங்கள் விடைபெற்றுச் செல்லவேண்டுமென்று நான் கோருவதைத் தவருகக் கருதாதிருக்கும்படி வேண்டிக் கொள்ளுகிறேன்'' என்ருள். தேவராஜனும் அதுதான் சரியென்று அங்கிருந்து தன் மனைக்குச் சென்ருன்.

---

## 10-வது அத்தியாயம்.

### காதலின் அனர்த்தமும் அக்கிரம யுத்தமும்.

தேவராஜன் இப்போது நேர்ந்த சம்பவத்தால் தனக்கும் ஞானம்பாளுக்கும் ஒரு விதமான சினேகபாவம் உண்டானதைப்பற்றித் தனக்குள் மிக்க சந்தோஷமே யடைந்தான். அவன் தன் வீட்டை நோக்கிச் சென்று முன் கூடத்தில் நுழைந்தபோது பக்கத்திலிருந்த அறையிலிருந்து தன் தாயாரின் குரல் கேட்டது.

தன் தாயார் என்றுமில்லாத ஒருவித ஆத்திரத்தோடு பேசிக்கொண்டிருந்தபடியால் அவன் அங்கு நின்று சற்று நிதானித்தான். கீழ்க்கண்ட சம்பாஷணை யவன் செவியில் வீழ்ந்தது.

அவன் தாயார் மிக்க ஆத்திரத்தோடு "நான் மறுபடி கூறுகிறேன்; இதே கடைசி முறையாக நான் உனக்கு

இணங்குகிறேன். ஆனால் நன்றாய் உன் மனதில் வைத்துக்கொள். என் மனதைத் திடப்படுத்திக்கொண் டிருக்கிறேன். இதுவே கடைசி தடவை யென்று நன்றாயறிந்துகொள். நான் ஒரே தீர்மானத்திற்கு வந்துவிட் டிருக்கிறேன்” என்றாள்.

அதற்குப் பதில் யாரோ என்னவோ கூறுவது மட்டும் தேவராஜின் செவிக்குக் கேட்டது. ஆனால் அது இன்னதென்று அவனுக்குப் புலப்படவில்லை. மறுவிநாடி அந்த அறையின் கதவை யாரோ திறப்பது போல் தோன்றியது. தேவராஜன் உடனே எதிரி லுள்ள மற்றொரு அறைக்குள் போய் விட்டான். பிறகு தன் தாய் சம்பாஷித்துக்கொண் டிருந்த அறையி லிருந்து யாரோ வெளியில் செல்வது போல் தோன்றியது. அவன் உடனே சாளரத்தின் வழியாய்ப் பார்த்தான். ஏனெனில் அக் கிழவி அன்று வந்த சின்னம்மாள் என்ற கிழவியே.

18649

அவன் அக் கிழவி யாசகத்திற்கு வந்தாளென்றே நம்பி யிருந்தான். இப்போது அவனுக்குள் மிக்க சந்தேக முண்டாய் விட்டது. அவள் தன் தாயாரைப் பயமுறுத்திப் பணம் பறிக்கிறாள் என்று அவன் கருதினான். இதனால் அவனுக்கு மிக்க கலக்க முண்டாய்விட்டது. உடனே அங்கிருந்து தன் தாயார் அறைக்குச் சென்று அங்கு உட்கார்ந்து ஆழ்ந்த சிந்தனையி லிருந்தான்.

அவன் அவ்வாறு சிந்தனையி லிருக்கும்போது, அவன் தாயார் அறைக்குள் வந்தாள். தன் புத்திரன் முக விகாரத்தைக் கண்டதும் திடுக்கிட்டாள். தன் தாயார் முகத்தில் சற்றுநேரம் ஒரு பயங்கரமான மாறுதல் உண்டாயிருந்ததாக அவனுக்குப் புலப்பட்டது. அவன் உடனே தன் தாயை நோக்கி,

600 008

# கனகபூஷணம்.

(இது ஓர் கற்புடைய உத்தமியின் அதிசயமான கதை.)

இதில் கற்பிலக்கணம் விவரமாய் உலக அனுபவத்தோடு விளக்கிக் காட்டப்பட்டிருக்கிறது. இக்கதாநாயகி தனக்கு நேரிடும் மிக்க பயங்கரமான அனேக இக்கட்டுகளிலிருந்து தன் கற்புக்குப் பழுதுவராமல் தப்பித்துக்கொள்வது மிக்க சோகத்தையும் ஆச்சரியத்தையும் தரும். அதோடு இதில் இவ்விதமான நடவடிக்கைகளும், அவைகளாலுண்டாகும் நன்மை தீமைகளும் தெளிவாய்க் கூறப்பட்டிருப்பதால், இது வாசிப்பவர்களுக்குச் சகலவித நற்குணங்களையும் போதிக்கக்கூடியதென்பது உண்மை. ஆண்பாலர்; பெண்பாலரிருவர்க்கும் வேண்டிய சகல புத்திமதிகளும் இதில் அடங்கியிருக்கின்றன. இது முழுதும் உலக வழக்கத்தையும் அனுபவமான ஆசாரத்தையும் ஒட்டி எழுதப்பட்டிருக்கிறது.

முதல்பாகம் ரூ. 1—12—0 2-ம் பாகம் ரூ. 1—12—

---

# இரத்தினபுரி இரகசியம்.

## ஓர் அற்புதமான தமிழ் நாவல்.

இதில் மிக்க ஆச்சரியமும் நெஞ்சு திடுக்கிடக்கூடியவை ஆதிமுதல் அந்தம் வரையில் மனதைக் கவரக்கூடியவைகளும சம்பவங்கள் நிறைந்துள்ளன. பலவித நடவடிக்கைகளையுடை பாத்திரங்களுமிருப்பதால், அநேக நீதிகளும், புத்திமதிக தக்க திருஷ்டாந்த பூர்வகமாக நிரூபிக்கப்பட்டிருக்கின்றன.

நமது சிறுவர், சிறுமிகளும், ஸ்திரீகளும் அவசியமாய் வேண்டிய இலௌகிக ஆசார விஷயங்களைப்பற்றி ஆங்க விளக்கிக் கூறப்பட்டிருக்கிறது. இதன இனிமையும் அ யும் வாசிப்போர்களால் முன்னமே புகழ்ந்து கூறப்பட்டிரு றன. ஆதலால் இதைப்பற்றி நாம் அதிகமாய்க் கூறவே தில்லை. இதில் எல்லா ரசங்களும் பூரணமா யிருக்கி வென்று கூறுகிறோம்.

முதல் பாகம் ரூ. 1—12—0 2-ம்பாகம் ரூ. 2—

ஆனந்தபோதினி ஆபீஸ், சௌகார்பேட்டை மதரா

# “ஆனந்தபோதினி”

## ஓர் இனிய மாதாந்தத் தமிழ்ச் சஞ்சிகை.

இச்சஞ்சிகை 1915ஞு ஜூலைமீ முதல் சென்னையில் பிரசுரிக்கப்பட்டு வருகிறது. தற்காலம் குன்றியிருக்கும் நமது தமிழ்ப் பாஷையின் அபிவிர்த்தியையும், நமது நாட்டாருடைய இலௌகீக ஆசார ஒழுக்கங்களின் சீர்திருத்தத்தையும், ஆன்மார்த்த ஞானாபிவிர்த்தியையும், பெண் கல்வியையும் நோக்கமாய்க் கொண்டே இச்சஞ்சிகை பிரசுரிக்கப்பட்டு வருகிறது. பிரதிசஞ்சிகையிலும், மேற்கண்ட விஷயங்களோடு, நமது சிறுவர், சிறுமிகளுக்கும், ஸ்திரீகளுக்கும் அவசியமான நீதிகளும், புத்திமதிகளும் காணலாம். எல்லா விஷயங்களும் உலக அனுபவமுடைய கல்வியாளரால் வரையப் படுகின்றன. இவையன்றி ம-ா-ா-ஸ்ரீ ஆரணி குப்புசாமி முதலியாரவர்களால் மிக்க நேர்த்தியான புது நாவல்களும் தொடர்ச்சியாய் எழுதப்பட்டு வருகின்றன. இப்போது இது நமது நாட்டில் பிரசுரிக்கப்படும் எல்லாத் தமிழ்ச் சஞ்சிகைகளையும் விட அதிகமான சந்தாதாரரையுடையது. இது ஜாதிமத பேதமின்றி ஒவ்வொரு மாணவனும், புருடனும், ஸ்திரீயும் அவசியம் வாசிக்கத்தக்கது. இது நமது நாட்டாரது நன்மையொன்றைமட்டும் கருதியே பிரசுரிக்கப்படுவதால், டெம்மி 8 பக்கம் அளவில், 40 பக்கம் விஷயங்களுள்ள இச்சஞ்சிகைக்குத் தபாற்கூலி யுள்பட வருட சந்தா 1 ரூபாதான் ஏற்படுத்தப்பட் டிருக்கிறது. பினாங்கு, ஸிங்கப்பூர் முதலிய வெளிநாடுகளுக்கு ரூபா 1-4-0. மாதிரி காப்பி இனாம்.

ஸ்ரீமான் ஆரணி குப்புசாமி முதலியார் இயற்றிய நாவல்கள்.

| | ரூ. | அ. | | ரூபா | |
|---|---|---|---|---|---|
| த்தினபுரி இரகசியம் | | | தினகரசுந்தரி | 1 | 0 |
| 2-பாகமும் ... | 4 | 0 | தபால்கொள்ளைக்காரர் | 0 | 14 |
| ளத்தீவு 2-பாகமும் ... | 3 | 0 | பத்மாஸனி ... | 0 | 14 |
| கோட்டை ... | 2 | 0 | வீரநாதன் ... | 0 | 12 |
| சார மாயவன் ... | 1 | 8 | குணசுந்தரன் ... | 0 | 12 |
| சுந்தரி ... | 1 | 4 | மஞ்சள் அறையின் மர்மம் | 1 | 8 |
| பூஷணம் 2-பாகமும் ... | 3 | 8 | கமலசேகரன் ... | 1 | 12 |
| ரும்பாள் ... | 0 | 12 | பூங்கோதை ... | 0 | 10 |
| தவிங் ... | 2 | 0 | இந்திராபாய் ... | 2 | 8 |
| பூஷணம் ... | 1 | 0 | அமராவதி 2 பாகமும் | 4 | 0 |
| கிருஷ்ண பரம ஹம்ஸரு | | | சகோதரவாஞ்சை | 0 | 6 |
| ரித்திர உபதேசங்கள் | 1 | 12 | லோகநாயகி அச்சில் | | |

லாசம் : மானேஜர், “ஆனந்தபோதினி” ஆபீஸ்,
வங்கடேச மேஸ்திரி வீதி, சௌகார்பேட், மதாராஸ்.

Printed at the “Ananda Bodhini” Press, Madras.